மலர் 6—இதழ் 15 ★ 11-8-57 சென்னை ★ விலை 16 காசு

தொழிற்சாலை எங்கள் பிறப்புரிமை!

——(0)——

அசாம் நாட்டில் எழும் உரிமைக் குரல்.

——(0)——

தொழில்வளர்ச்சிதான் ஒருநாட்டின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும்

——(0)——

எண்ணெய்த் தொழிற்சாலை தங்கள் நாட்டில் அமைக்கப்படாதது குறித்து அசாமில் உண்டான கொந்தளிப்பு இன்னும் அடங்கவில்லை. நாளுக்கு நாள் அது வளர்ந்தபடி இருக்கிறது!. அசாம் நாட்டில் கௌகாத்தியில் புதிய எண்ணெய்த் தொழிற்சாலை அமைக்கப்படுமா மாட்டாதாஎன்பதுஅசாம் நாட்டில் இன்று பெரும் அரசியல் பிரச்சினையாகிவிட்டது.

கடந்த ஜூலை 28ந்தேதி கண்டனநாளாக-மத்திய அரசாங்கத்தின் முடிவை எதிர்த்து 'அர்த்தால்' நாளாக அசாம் நாட்டில் நடத்தப்பட்டது. அன்று அந்த மாநிலம் பூராவும், ஷில்லாங் தலைநகரிலிருந்து சிறுசிறு குன்றுகளிடை மறைந்து கிடக்கும் சிற்றூர்கள்வரை எல்லாப் பகுதியிலும் அந்த "கண்டனநாள்" நடத்தப்பட்டது. கடையடைப்பு, வேலை நிறுத்தம் மிகப் பரந்த அளவில் அங்கு நடந்தேறின. அன்று வந்த கண்டன ஊர்வலங்களில் "தொழிற்சாலை எங்கள் பிறப்புரிமை!" என்று அசாமியர்கள் முழங்கினார்களாம். எண்ணெய் சுத்தம செய்யும் தொழிற்சாலை தங்கள் நாட்டுக்கு வேண்டும் என்பதில் அவ்வளவு ஆவேசத்துடன் அவர்கள் கிளர்ச்சி செய்கின்றனர்.

"சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை" என்ற குரலை பாலகங்காதர திலகர் எழுப்பினார். அது இந்திய விடுதலை இயக்கத்தின் முழக்கமாயிற்று. அதைத் தங்களுடைய இதய கீதமாக இசைத்தபடி பல்லாயிரக்கணக்கான நாட்டுப்பற்றுடையோர்—இளைஞர்களும் முதியவர்களும், ஆடவரும் பெண்டிரும் போராடினார்கள். அடக்கு முறையை மீறினார்கள், எண்ணற்ற தியாகங்களுக்கு ஆளாக்கிக்கொண்டார்கள், உலகில் மிகப் பலம் பொருந்திய ஏகாதிபத்தியமாக விளங்கிய ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்றார்கள். "அடிமைத்தனை அகலவேண்டும், இந்த நாடு வாழவேண்டும்" எனப் பேசும் பொழுதெல்லாம், "சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை!" என்ற கடுமையான முழக்கம் கேட்கப்பட்டது. அந்த முழக்கத்தின்முன் ஆங்கில ஏகாதிபத்தியங்கூட பணிந்து செல்லவேண்டியதாயிற்று!

"சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை" இந்திய தேசியக் கிளர்ச்சியின் தாரக மந்திரமாக இருந்தது.

இன்று அசாமில் நடக்கும் ஒரு கிளர்ச்சியில் "தொழிற்சாலை எங்கள் பிறப்புரிமை" என்ற முழக்கம் கேட்கிறது!

எங்கோ ஒரு மூலையில் எழுப்பப்படுகிற சத்தமாக அதை அலட்சியம் செய்துவிட முடியாது. "சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை" என்ற குரலை முதலில் திலகர் எழுப்பியபொழுது, மராத்திய நாட்டில் யாரோ ஒருவன் போடுகிற சத்தமாகத்தான் முதலில் ஆங்கில ஏகாதிபத்தியம் அலட்சியப் படுத்தியது. ஆனால் வர வர அந்தக் குரல் வலுத்து, மராத்தியத்தில் எழுந்த முழக்கம் இந்தியத் துணைக்கண்டம் பூராவும் பரவியது, வெவ்வேறு மொழிகளில், வெவ்வேறு மக்களிடை அந்தக்குரல் எதிரொலித்தது; அலையோசை எழுந்து வருவது போல அந்த முழக்கம் பேரொலியுடன் ஆர்த்துவந்தது, ஏகாதிபத்தியம் கட்டிவைத்த மணற்கோட்டைகள் கரைந்து போயின.

ஆங்கில ஏகாதிபத்தியத்தால் முதலில் அலட்சியப்படுத்தப்பட்டபோதிலும், மராத்தியத்தில் எழுந்த உரிமை முழக்கம் இந்திய துணைக் கண்டம் பூராவும் பரவியதுபோல, டில்லி ஏகாதிபத்தியம் அலட்சியப் படுத்தினாலும் அசாமில் எழுகிற "தொழிற்சாலை எங்கள் பிறப்புரிமை" என்ற குரல் பல்வேறு மாநிலங்களிலும் எதிரொலிக்க ஆரம்பிக்கும்.

ஏகாதிபத்தியம் செய்த கொடுமைகளைப் பற்றி சுதந்தரப் போராட்ட காலங்களில் பேசப்பட்டதை விட அதிகக் கோபத்துடன் டில்லி ஆட்சி தங்களுக்குச் செய்கிற கொடுமையைப்பற்றி அசாமியர் பேசுகின்றனர். "இவ்வளவு ஆவேசமான பேச்சுகள் இதற்கு முன் அசாம் சட்டசபையில் பேசப்பட்டதில்லை" என்று பம்பாய் பத்திரிக்கை ஒன்று குறிப்பிடுமளவுக்கு, காரசாரமான கண்டனங்கள் அசாம் சட்டசபையில் எழுப்பப்பட்டுள்ளன. அவர்களுடைய தாக்குதல் அனைத்தும் மத்திய அரசாங்கத்தை நோக்கித் திருப்பப்பட்டுள்ளது.

"சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை" என அன்று ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய காங்கிரசுக்காரர்கள் பலரே, இன்று "எண்ணெய்த் தொழிற்சாலை எங்கள் பிறப்புரிமை!" என்று முழக்கமிடுகிறார்கள். அன்றைய கண்டனம் லண்டனை நோக்கி வீசப்பட்டது, இன்றைய கண்டனம் டில்லியை நோக்கி வீசப்படுகிறது. தூரம் குறைந்திருக்கிறது, குரலில் இருந்த உணர்ச்சியும் ஆவேசமும் வளர்ந்திருக்கின்றன.

அசாம் நாட்டில் நடைபெறும் கிளர்ச்சியில் காட்டப்படும் உணர்ச்சியும் ஆவேசமும் கொஞ்சநஞ்சமல்ல! எண்ணெய் சுலபத்தில் தீப்பிடித்துக்கொள்ளும் தன்மையுடையது. எண்ணெய்ப் பிரச்சினை அசாம் நாட்டினர் உள்ளங்களையெல்லாம் பற்றிப் பிடித்துக்கொண்டுள்ளது, அத்துடன் கிளர்ச்சி உருவத்தில் கொழுந்துவிட்டு எரிகிறது! அசாம் நாட்டுக்கு எண்ணெய்த் தொழிற்சாலையை பெற்றாகவேண்டும் என்ற உணர்ச்சியால், "ஏக இந்தியா" "பாரத நாடு" என்ற பேச்செல்லாம் அங்கு மறக்கப்பட்டு விட்டது. "முதலில் இந்தியன், பிறகு வங்காளத்தவன்" "முதலில் இந்தியன், பிறகு தமிழன்" "முதலில் இந்தியன், பிறகு அசாமியன்" என்று முன்பெல்லாம் தேசியத் தலைவர்கள் ஒவ்வொரு மாநிலத்தவருக்கும் நல்கும் சமரச போதனைகள் அசாம் நாட்டில் சத்தற்ற பேச்சுக்களாகிவிட்டன. "முதலில் அசாம் நாடு" என்ற எண்ணம்—குரல்—முழக்கம் அசாம் நாட்டில் வளர்ந்திருக்கிறது.

முதலில் அசாம் நாட்டில் கௌகாத்தியில் வைப்பதாக இருந்த எண்ணெய் சுத்தம்செய்யும் தொழிற்சாலையை பௌராணி என்ற இடத்துக்கு மாற்ற இந்திய அரசாங்கத்தினர் முடிவு செய்தனர். பௌராணி என்பது அரேபியாவிலோ, அமெரிக்காவிலோ இல்லை. அதுவும் இந்தியாவிற்குள்தான் இருக்கிறது. முத

(12-ம் பக்கம் பார்க்க)

"மன்றம்"

அலுவலகமும் அச்சகமும்

'93, பிராட்வே சென்னை-1'

என்ற முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கின்றன.

கடிதம் எழுதுபவர்களும், ஏஜண்டுகளும், இனிமேல் புதிய முகவரிக்குக் கடிதங்களை அனுப்பவும்.

டெலிபோன் எண் : "55697"

அதில் மாற்றமில்லை.

வினா: சென்னை சட்டமன்றத்தில் திரு. கருணாநிதி அவர்கள், "பின்தங்கிய வகுப்பார் பற்றிக் குறிப்பிடும் பட்டியலில் "சாணான், வண்ணான், குசவன் என்றெல்லாம் அச்சியற்றப் பட்டிருப்பதைச் சாணார் வண்ணார், குயவர் என்று மாற்றியமைக்கலாமா?" என்றும் கருத்துப்பட வினா எழுப்பியபோது, நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் "'ன்' என்று இருப்பதால் மதிப்பு ஒன்றும் குறைந்துவிடாது, 'ர்' என்பதால் மதிப்பு அதிகமாகியும் விடாது" என்று குறிப்பிட்டுள்ளாரே, அது பொருத்தமான ஒரு கூற்றுதானா?

விளக்கம்: தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் கூற்றில் எவ்வளவுக்கெவ்வளவு அறியாமை படிந்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆணவமும் படிந்து கிடக்கிறது. மாற்றுக் கட்சியினரின் கருத்து எவ்வளவுதான் நேர்மையும், நாணயமும், தெளிவும், உண்மையுமான அடிப்படையில் அமைந்திருந்தாலும், அதற்கு மதிப்புதர மறுததுத் 'தாம் பிடித்த முயலுக்கு மூன்றேகால்' என்று வலியுறுத்தும் பண்பாடற்ற போக்கில்தான் நிதி அமைச்சரும், அவரைச்சார்ந்த பிறரும் இருந்து வருகிறார்கள் என்பதற்கு மேற்கண்ட கூற்றே போதுமான எடுத்துக் காட்டாகும்.

பின்தங்கிய வகுப்பார் பற்றிய பட்டியலில் மருத்துவர், இசைவேளாளர், மேளக்காரர் என்று பல வகுப்பார் குறிப்பிடப்படும் நிலையில், சாணார், வண்ணார், குயவர் என்று ஏனைய வகுப்பினரையும் குறிப்பிடக்கூடாதா என்றுதான் கலைஞர் கருணாநிதி அவர்கள் சமதர்ம நோக்கோடும், சமத்துவ மனப்பான்மையோடும் அமைச்சரவையைக் கேட்டார்கள். இந்தத் திருத்தத்தைப் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொள்வதுதான், நல்லறிவு படைத்த ஒரு அமைச்சரின் கடமையாகும். ஆனால் தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் அத்தகையப்பெருந்தன்மையை மறுத்து, 'அன்' விகுதியையும் 'அர்' விகுதியையும் ஒன்றாகத்தான் மதிப்பேன் என்ற அளவுக்கு உறுதியாகத் தெரிந்துள்ளார்.

'அன்', 'ஆன்', 'அர்,' 'ஆர்' என்று சொல்ல வேண்டிய விகுதிகளை 'ன்', 'ர்', என்று குறிப்பிடுவதிலிருந்தே அவரது இலக்கண அறிவை முதலில் தெரிந்து கொள்ளலாம்.

ஒருமைக்கும் பன்மைக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்திருப்பாரேயானால், அமைச்சர் இப்படியெல்லாம் ஆணவமாக மறுப்புத் தந்திருக்க மாட்டார். பட்டியல் பல்வேறு பின்தங்கிய வகுப்பினரைக் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு வகுப்பினரையும் குறிக்கும் சொல், பண்மைச் சொல்லாக இருக்க வேண்டுமே ஒழிய, ஒருமைச் சொல்லாக இருக்கக்கூடாது. தனித்தனி வகுப்பினரைச் சாணான், வண்ணான், குயவன் என்று குறிப்பிடுவதே பிழையாகும். சாணார், வண்ணார், குயவர் என்று அந்தந்த வகுப்பினரைக் குறிப்பிடுவதுதான் இலக்கணப்படி சரியாகும். 'அர்' 'ஆர்' விகுதிகள் இருக்கவேண்டிய இடத்தில் 'அன்' 'ஆன்' விகுதிகள் இருப்பது இலக்கணப்படி பிழையாகும் என்பதை உணர்ந்தாவது அமைச்சர் பட்டியலைத் திருத்த முன் வந்திருக்க வேண்டும்.

மேலும் 'அன்' விகுதிக்கும் 'அர்' விகுதிக்கும் ஒரே வித மதிப்புத்தான் என்று தோழர் சுப்பிரமணியம் அவர்கள் வாதாடுவது எக்கொலி கொட்டி நகைக்கத் தக்கதாக இருக்கிறது. 'அன்' 'ஆன்' 'மன்' 'மான்' ஆகியவை ஆண்பால் ஒருமையை உணர்த்தும் விகுதிகளாகும். 'அர்' 'ஆர்' 'இர்' 'மார்' 'கள்' ஆகியவைகள் பலர்பாலை உணர்த்தும் விகுதிகளாகும். ஆகவே 'அன்' விகுதிக்கும் 'அர்' விகுதிக்கும் இலக்கண ஆசிரியர்களும்; தமிழறிந்தோரும் கொடுக்கும் மதிப்பீடு ஒரே தன்மையதல்ல. மேலும் 'அர்' 'ஆர்' 'கள்' போன்றவைகள் உயர்வு, சிறப்பு, மதிப்பு, கருதி ஒருமைப்பெயர்களோடும் சேர்ந்து வரும் என்பது இலக்கணம் ஆகும். சி. சுப்பிரமணியம் வந்தான் என்பதற்கும் சி. சுப்பிரமணியம் வந்தார் என்பதற்கும் மதிப்பீட்டில் உள்ளபடியே வேறுபாடு இருக்கிறது. 'சி. சுப்பிரமணியம் வந்தான்' என்னும் போது, பொதுவாகச் சுப்பிரமணியம் என்பவன் ஆணினத்தைச் சேர்ந்த ஒருவன் என்றுதான் பொருள்படும். 'சி. சுப்பிரமணியம் வந்தார்' என்னும்போது தான் சுப்பிரமணியம் என்னும் சிறப்புக்குரிய, மதிப்பிற்குரிய ஒருவர் வந்தார் என்று பொருள்படும். 'அன்' விகுதி போட்டால் உள்ளபடியே ஒருவனுடைய மதிப்பு உறுதியாக குறைகிறது என்பதையும், 'அர்' விகுதி போட்டால் உள்ளபடியே ஒருவரது மதிப்பு உறுதியாக உயருகிறது என்பதையும் கல்வி அமைச்சர் இனியேனும் உணருவாராக! 'அன் விகுதிக்கும் 'அர்' விகுதிக்கும் உள்ள சாதாரண வேறுபாட்டைக்கூட உணராத ஒருவர் தமிழகத்தின் கல்வி அமைச்சராக வந்து வாய்த்திருக்கிற நிலை குறித்து தமிழகம் தலைகுனிய வேண்டியிருக்கிறது.

'காந்தியார் இருந்தார்.' 'காமராசர் சூழ்ச்சி செய்தார்' 'சுப்பிரமணியம் குழம்பினார்' என்ற சொற்றொடர்களைக் 'காந்தி இருந்தான்' 'காமராசன் சூழ்ச்சி செய்தான்' 'சுப்பிரமணியம் குழம்பினான்' என்று மாற்றிக்கூறும்போது வேறுபாடு எதுவுமே தோன்றவில்லையா? 'சட்ட மன்றத்திற்கு காமராசன் வந்தான்,' 'சட்டமன்றத்தில் சுப்பிரமணியம் பேசினான்' என்று கூறினால், தோழர் சுப்பிரமணியம் அவர்களுக்கு வருத்தமோ, அருவருப்போ, ஏற்படாதா? அப்படிக்கூறினால் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதைப் போல் அவருக்குச் சினம் மூளத்தானே செய்யும்.

சாணான், வண்ணான், குயவன் என்னும்போது ஒருவித இழிதன்மை உணர்த்தப் படுகிறது என்பதையும், சாணார், வண்ணார், குயவர், என்னும் போது ஒருவித மதிப்பு அளிக்கப்படுகிறது என்பதையும் நிதி அமைச்சர் வீம்புக்காக உணர மறுத்தாலும் சான்றோரும், பொதுமக்களும் நன்கு உணர்வர். 'அன்' போட்டாலும் 'அர்' என்று போட்டாலும் ஒரே மதிப்புத்தான் என்பதை உணர்த்த அவர் காட்டிய எடுத்துக்காட்டு எள்ளி நகையாடத் தக்கதாக அமைந்திருக்கிறது. "டிரைவர் என்றால் மதிப்பு உயர்ந்து விடும் என்று நினைத்து டிரைவன் என்று அழைத்தாராம் ஒருவர்" என்று சொல்லி நண்பர் கருணாநிதியின் வாதத்தைக் கேலிசெய்துவிட்டதாக நினைத்துத் தமக்குத்தாமே மகிழ்ந்து கொண்டிருக்கிறார். யாரோ சுப்பிரமணியம் அவர்களுக்கு 'அண்ணன்' ஒருவன் டிரைவரை 'டிரைவன்' என்று அழைத்திருக்கிறான் என்று தெரிகிறது. தோழர் சுப்பிரமணியம் அவர்களுக்கு 'அன்' 'அர்' ஆகிய இரண்டிற்கும் வேறுபாடு தெரியவில்லை; ஆனால் மேலே சுட்டிக் காட்டப்பட்ட சுப்பிரமணியத்தின் அண்ணனுக்கோ ஆங்கிலத்திற்கும் தமிழுக்குமே வேறுபாடு தெரியவில்லை என்று தான் கொள்ளவேண்டியிருக்கிறது.

ஆங்கிலத்தில் 'டிரைவர்' என்ற சொல் உண்டு. 'டிரை[வன்]' என்ற சொல் இல்லை. ஆனால், தமிழில் 'சாணான்' என்ற சொல்லும் இண்டு. 'சாணார்' என்ற சொல்லும் உண்டு. 'சாணான்' - 'சாணார்' என்ற சொற்களிலுள்ள 'ஆன்' 'ஆர்' விகுதிகளிடையே உள்ள வேறுபாடுகளைப்பற்றி விவா[தி]க்கும்போது, தமிழ்ச் சொல்லே அல்லாத 'டிரைவர்' என்ற சொல்லையும்; வழக்கத்திலேயே இல்லாத கற்பனைச் சொல்லான 'டிரைவன்' என்ற சொல்லையும் எடுத்து வைத்துக்கொண்டு அவற்றிலுள்ள 'அர்'-'அன்' விகுதிகளைப் பற்றிப் பேசுவது எவ்வளவு பைத்தியக்காரத் தனமான செயலாகும் என்பதை நல்லறிவுடையோர் நன்கு உணர்வர். 'அன்' விகுதிக்கும் 'அர்' விகுதிக்கும் உள்ள வேறுபாடுகளைத் தமிழ்ச் சொற்களைப் பொறுத்துத்தமிழ் இலக்கணப்படி நண்பர்கருணாநிதி அவர்கள் உணர்த்தினார்கள். தமிழ் இலக்கணம் சிறிதுகூடப் பொருந்[த]வராத ஆங்கிலச் சொல்லையும் கற்பனைச் சொல்லையும் எடுத்துக்கொண்டு தோழர் சுப்பிர மணியம் அவர்கள் அலறுவது ஏனோ? மல்லாந்து படுத்துக்கொண்டு நேரே உயர் துப்புகிற எச்சில் தம்மீதே படுவதுபோல், தோழர் சுப்பிர மணியம் அவர்கள் பிறர்மீது வீசுகிற கேலிக் குறிப்பு மீண்டும் அவர்மீதே வந்து விழுகிறது. அவர் தம்மைத்தாமே கேலிசெய்துகொண்டு மகிழ்ச்சியுறுகிறார் என்றுதான் கொள்ளவேண்டியிருக்கிறது.

மதிப்பு கொடுப்பதில் எல்லா வகுப்பினரையும் சமமாக மதிக்கவேண்டும் என்ற ச[ன] நாயகப்பண்பு வளரும் இந்நா[ட்]களில், கலைஞர் கருணாநிதி அவர்களின் வாதந்தான் பொருத்தமானதும், ஏற்றுக்கொள்ளக் கூடியதும் ஆகும். தோழர் சுப்பிரமணியம் அவர்களின் கூற்று எவ்விதத்திலும் பொருத்தமில்லாத பிழைபட்ட கூற்றாகும் என்பதை உணர்க.

—இரா. தே[...]

மன்றம்

ஞாயிறு 11—8—57 சென்னை

பிரார்த்தனைக் குண்டுகள்

டெல்லி நகரசுத்தி தொழிலாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பட்டிருக்கிறது. அந்தக் கொடுஞ் செயலைக் கண்டித்துப் பாராளுமன்றத்தில் பலர்-காங்கிரசுக்காரர்கள் உட்பட பலர் பேசியுள்ளனர். சரியான சமாதானம் தரமுடியாமல் பண்டித பந்த் சங்கடப் பட்ட நேரத்தில், பண்டித நேரு குறுக்கிட்டு "மிக எதிர் பாராததும் சோகமயமானதும் ஆன சம்பவம்" என அதைப் பற்றிக் கூறியுள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது குப்பை கூட்டும் தொழிலாளர்கள் வாழும் சேரியில், ஒரு நெருக்கமான இடத்தில், குப்பை கூட்டுவோர் பலர் கூடி நின்ற கூட்டத்தில்! கூட்டத்தின் மீது துப்பாக்கியை நீட்டி ஒருவரைக் கொன்று பலருக்குப் படுகாயங்களைப் போலிசு தந்ததே, அந்தக் கூட்டத்தினர் கொள்ளையடித்தார்களா, கொலை செய்யத் திட்டமிட்டார்களா, அல்லது களவு கலகம் எதிலாவது ஈடுபட்டார்களா? ஆயுதங்களைத் தாங்கி ஆர்பாட்டஞ் செய்தார்களா? துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ய வேண்டிய அளவுக்கு என்ன பலாத்காரச் செயல்கள் நிகழ்ந்தன? அவர்கள் ஏழைகள், சேரியில் இருப்பவர்கள், சிறு குடிசைகளில் வாழ்பவர்கள், டில்லி நகர சபையின் கீழ் குப்பை கூட்டும் தொழிலைச் செய்பவர்கள், கூலி உயர்வு வேண்டி வேலை நிறுத்தம் செய்தார்கள், இவைதாம் அவர்கள் செய்த "குற்றங்கள்"! அந்த ஏழைகள் கூலி கேட்டனர், அரசாங்கம் போலிசை அனுப்பியது! அந்த ஏழைகள் உணவு கேட்டனர், அரசாங்கம் துப்பாக்கிக் குண்டுகளைத் தந்தது! அவர்கள் கேட்டது வாழ்வு, கிடைத்தது இரத்தம், சாவு!

வேதனை கலந்த விசித்திரமாக, துப்பாக்கிப் பிரயோகம் நடந்த அந்தச் சேரியில்தான், முன்பு அண்ணல் காந்தி தங்கியிருந்திருக்கிறார்! அவர் எந்த இடத்தில் நின்று பிரார்த்தனைக் கூட்டம் நடத்துவாரோ, அந்த மேடை மீது துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்திருக்கின்றன!

அவர் அன்று சேரி வாழ் மக்களிடை பிரார்த்தனை செய்தார், இப்பொழுதுள்ள அரசாங்கத்தினர் செய்யும் "பிரார்த்தனைகள்" துப்பாக்கிக் குண்டுகளாக இருக்கின்றன!

அன்று காந்தியாரின் உபதேசங்கள்-கனிவுச் சொற்கள் பலரின் கன்னங்களில் கண்ணீரை வருவித்திருக்கும், அவர் முன் பலர் நிலந்தோய வீழ்ந்து வணங்கியிருப்பார்கள்! இப்பொழுதுள்ள அவருடைய வாரிசினர் நடத்தும் துப்பாக்கி உபதேசங்கள் பலருடைய கன்னங்களில், தலையில் இரத்தத்தை வருவிக்கின்றன, பலருடைய உடல்கள் நிலத்தில் விழுகின்றன!

அவர் அகிம்சையைப் போதித்தார், அவர் பெயரைச் சொல்லி ஆட்சி நடத்துபவர்கள் துப்பாக்கி முனையில் போதனைகளைத் தருகிறார்கள்!

எடுத்ததற்கெல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய போலிசார் முற்பட்டு விடுகின்றனர். வெள்ளைக்காரன் காலத்தில் நடந்ததை விட அதிகமான வெறித்தன்மையுடன் பல துப்பாக்கிப் பிரயோகங்கள் காங்கிரசாட்சியில் கடந்த பத்தாண்டுக் காலத்தில் நடைபெற்றிருக்கின்றன. முன்பெல்லாம் கூட்டத்தினரைப் பயமுறுத்த, ஆகாயத்தைப் பார்த்துச் சுடுவது என்ற விதியிருந்தது. "பயமுறுத்தச் சுடு" (Shoot to scare) என்ற விதி; காங்கிரசுக்காரர்கள் ஆட்சியில் "கொல்வதற்காகச் சுடு" (Shoot to kill) என்று அரசாங்க பூர்வமான உத்தரவாகிவிட்டது. பத்து தடவை இருபது தடவைகள் சுட்டு கூட்டம் கலைந்து போய் விட்டாலும் ஒருவர்கூட இறக்கவில்லை யென்றால், "போலிசாருக்குச் சரியாகக் குறிபார்க்கத் தெரிய வில்லை. பத்துப் பதினைந்து சுற்றுகள் சுட்டும் ஒருவர் கூட இறக்கவில்லையே!" என்று அதை ஒரு குறையாக இன்றைய காங்கிரசு அரசாங்கம் கருதுகிறது.

மக்களை அடக்க வெள்ளை ஏகாதிபத்தியம் எந்தக் கொடுமைகளைக் கையாண்டதோ அவற்றையெல்லாம் ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கி மக்களை அடக்க டில்லி ஆதிபத்தியம் முயலுகிறது. இல்லை யென்றால், கடந்த பத்தாண்டுகளில் ஏராளமான துப்பாக்கிப் பிரயோகங்கள் ஏன் நடைபெற்றன? கடைசியாக, டில்லி சேரி வாழ்வினர் மீது துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்யப்பட்டது ஏன்? "மற்றொரு ஜாலியன்வாலாபாக் இங்கு நடத்தப் பட்டுள்ளது" என்று பாராளுமன்றத்தில் கூறு மளவுக்கு கொடும் செயல் ஏன் நிகழ்ந்தது?

துப்பாக்கிப் பிரயோகங்களுக்குச் சமாதானம் கூற வரும் பொழுதெல்லாம் "அமைதி காக்க துப்பாக்கிப் பிரயோகம் அவசியமாயிற்று" என்று அரசாங்கத்தினர் கூறி விடுகின்றனர். சில தடவைகளில் பொது மக்களின் கூக்குரலும் பத்திரிக்கைகளின் கண்டனமும் பாராளுமன்றத்தில் பேச்சும் அதிகமாக இருந்தால் விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்படுகின்றன. அவைகளின் முடிவு எதுவாக இருந்தாலும், சிறு விவாதங்களுடன் அடங்கி விடுகிறது, மீண்டும் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்தபடி இருக்கின்றன.

"அமைதிகாக்க" என்ற காரணத்திற்காக போலிசார் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர் என்று அரசாங்கத்தினர் கூறுவதில் அர்த்தமில்லை. உலகில் பற்பல நாடுகளில் அமைதிகாக்க, அங்குள்ள போலீசார்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடியாகவா இருக்கிறார்கள்? ஒரு சேரி வாழ் மக்கள் வேலை நிறுத்தம் செய்ததற்காக இங்கு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்படுகிறது. அண்மையில் இங்கிலாந்து நாட்டில் கூலி உயர்வு கேட்டு பஸ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள், பல்லாயிரக் கணக்கில் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வேலை நிறுத்தம் செய்பவர்களை மீறி வரும் பஸ்களை, லாரிகளை மறித்து, சக்கரங்களை அகற்றி ஆர்பாட்டம் செய்தார்கள், பல இடங்களில் பாதையில் படுத்துக்கொண்டு வழியை மறித்தார்கள். அமளியும் ஆர்பாட்டமும் கோபதாபமும் மிகுந்திருந்த அந்த நேரங்களில் கூட, அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்களை வளைத்துத் தூக்கிச் சென்று அப்பால் விடுவதற்குப் போலிசார் வந்தார்களேயன்றி, இங்கு நடப்பது போல இரும்புத் தொப்பியுடன் துப்பாக்கியைத் தூக்கி வந்து விடவில்லை.

மற்ற நாடுகளில் எவ்வளவு பெரிய வேலை நிறுத்தங்கள் ஆர்பாட்டங்கள் நிகழ்ந்தாலும், துப்பாக்கிப் பிரயோகம் என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. இந்திய துணைக் கண்டத்திலோ, சேரியிலிருப்பவர்கள் வேலைக்கு வர மறுத்தாலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு விடுகிறது! இங்கு ஒரு மனிதன் கொல்லப்படுவது அரசாங்கத்திற்கு சாதாரணமான செயலாகயிருக்கிறது! தனிப்பட்ட மனிதனுடைய உயிரைப் பற்றி அவ்வளவு அலட்சியத்துடன் அரசாங்கம் நடந்து கொள்கிறது!

காந்தியார் அருளுரை பகன்ற மேடை மீது பாய்ச்சப் பட்ட குண்டுகள், காங்கிரசாட்சியில் ஏற்பட்டுள்ள மாறாத களங்கங்கள்! காந்தியார் இப்பொழுதில்லை, அவருடைய அருளுரைகள் காங்கிரசுக்காரர்களின் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்படுகின்றன!

பழைய கடிகாரம்

——(0)——

பிரெஞ்சு புரட்சிக்கு முன்பிருந்த பிரெஞ்சு மன்னன் 14வது லூயி, எப்பொழுது பார்த்தாலும் பழைய கடிகாரங்களின் பக்கத்திலேயே உட்கார்ந்து-வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பானும். அவனது அரண்மனையில் எங்கு பார்த்தாலும் விதவிதமான கடிகாரங்கள் தொங்கிக் கொண்டிருக்குமாம். கடிகாரங்களைப் பிரிப்பது, சிர் பார்ப்பது; ஓட விடுவது இவைகள் தாம் அவனுக்கு முக்கிய வேலைகளாகப் பட்டன. அரசாங்க நிர்வாகத்தில் காட்டாத அக்கரையை, பழைய கடிகாரங்களிடம் அரசன் காட்டினான்.

இலட்சக் கணக்கான மக்கள் பஞ்சத்தால், பசியால் பிரெஞ்சு நாட்டில் துடிதுடித்தார்கள்; அவர்கள் இட்ட கூக்குரல் மன்னனுடைய காதில் விழவில்லை, அரண்மனையிலிருந்த கடிகாரங்கள் தரும் மணியோசை தான் அவன் காதில் விழுந்தது.

சிர்கேடடைந்த பிரெஞ்சு நாட்டுப் பொருளாதாரத்தை ஆராய்ந்து சிர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மன்னனுக்கு உண்டாகவில்லை. ஏதாவது ஒரு கடிகாரம் சிறிது சிர்கேடடைந்தாலும் அதன் பக்கத்தில் போய், ஏணியைப் போட்டு ஏறிச் சென்று, அதைத் திருத்த மன்னன் சென்றான். மன்னனுக்கு உதவியாகப் பிரபுக்கள், மந்திரிகள், படைத் தலைவர்கள் காத்துக் கொண்டு நின்றார்கள்.

அரசாங்கக் காரியங்களில் அக்கரை காட்டாமல் பழைய கடிகாரங்களில் நேரத்தை செலவிட்டுக் கொண்டிருந்ததால், நாட்டில் துயரம் மிகுந்த பொழுதும் கலவரம் மூண்ட பொழுதும் மக்கள் கிளர்ச்சி செய்த பொழுதும் புரட்சி வெடித்த பொழுதும் மன்னனால் அவற்றை அறிந்து கொள்ள முடியவில்லை. அதன் பலன் மன்னனை மிறி மக்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். மன்னன் பதவியிலிருந்து விரட்டப்பட்டான், பின்பு உலகத்திலிருந்தே வெளியேற்றப் பட்டான்.

கடிகாரத்தின் முன் உட்கார்ந்து அதன் முட்கள் நகரும வேகத்தை 14வது லூயி கவனித்துக்கொண்டிருந்தானே யன்றி, வெளியில் காலம் மாறிக்கொண்டிருக்கும் வேகத்தைக் கவனிக்கவில்லை!

கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்ட வெளியில் காலம் மாறிடும் வேகத்தைப் பார்க்கத் தவறிய பிரெஞ்சு மன்னனைப்போல, அண்மையில் அரச பதவியிலிருந்து விரட்டப்பட்ட துனிசிய மன்னரும் இருந்திருக்கிறார், துனிசிய மன்னர் சிதி மகம்மது அல் அமின் என்பவருக்குப் பழைய கடிகாரங்களெல்லாம் ஆர்வம் அதிகமாம். அவருடைய அரண்மனையில் பழைய காலத்துக் கடிகாரங்கள் ஏராளமாக வைக்கப்பட்டிருந்தனவாம். விதவிதமான கடிகாரங்கள்— பல தலைமுறைகளுக்கு முன்பு பழக்கத்திலிருந்த பழைய கடிகாரங்கள், ஒன்று இரண்டல்ல 2000 க்கு மேல் சேர்க்கப்பட்டிருந்தன. பழைய கடிகாரங்கள் அவருக்குப் பொழுது போக்கு.

துனிசியா என்பது வட ஆப்பிரிக்காவில் மத்திய தரைக் கடலை அடுத்து, லிபியா, அல்ஜிரியா ஆகிய இருநாடுகளுக்கும் மத்தியில் இருக்கும் ஒரு சிறுநாடு அது பிரெஞ்சு ஆதிக்கத்துக்கு கட்டுப்பட்ட நாடுகளில் ஒன்று.

பிரெஞ்சு மன்னர்களைப் போலவே, துனிசிய மன்னரும் ஆடம்பரத்தில் அதிகப் பிரியமுள்ளவராம். அரசாங்க வருமானத்தில் பெரும்பகுதி அரண்மனைச் செலவுகளுக்குப் போயிற்று. அரசருடைய சொந்த செலவுகளுக்கு மட்டும் நாளொன்றுக்கு 13,000 ரூபாய்கள் அளவு வருமானம் தரப்பட்டதாம்! அப்படியென்றால் ஆண்டுக்கு அரசருக்காக, அரண்மனைக்காக எவ்வளவு செலவாகும் என்பதை ஊகித்துக்கொள்ளலாம். நாளொன்றுக்கு 13000 ரூபாய்கள் வருமானம் பெற அவர் செய்த வேலையெல்லாம் அரண்மனையிலிருந்த கடிகாரங்களையெல்லாம் பார்வையிட்டு வருவதுதான்!

ருஷிய நாட்டு அரசருக்கு "சார்" என்றும், பர்சியநாட்டு மன்னர்களுக்கு "ஷா" என்றும், ஜப்பான் நாட்டு மன்னர்களுக்கு "மிகாடோ" என்றும் பொதுப்படையாகக் கூறப்படுவதுபோல, துனிசு நாட்டு மன்னர்களுக்கு "பே" என்ற பொதுவான பெயர் இருந்தது. துனிசு மொழியில் "பே" என்றால் அரசன் என்று பொருள் இந்த "பே" அரசர்கள் பரம்பரை 1705ம் ஆண்டில் ஆரம்பித்தது. அதிலிருந்து இரண்டரை நூற்றாண்டுகளாக அந்த அரச பரம்பரை துனிசு நாட்டை கோலாகலமாக ஆண்டு வந்தது. மத்திய தரைக்கடலோரத்திலிருந்த ஐரோப்பிய நாடுகளும் துருக்கியும் துனிசு மீது மாறிமாறி ஆதிக்கஞ் செலுத்திவந்தன. 1881 லிருந்து பிரெஞ்சு ஆட்சிக்குக் கட்டுப்பட்ட நாடாக துனிசு இருக்கிறது. பே மன்னர்களும் பிரெஞ்சு அதிகாரத்துக்கு உட்பட்டு இருக்க ஒப்புக்கொண்டனர்.

இரண்டாவது உலகப் போருக்குப்பின், வட ஆப்ரிக்காவில் பிரெஞ்சு ஆதிபத்தியத்தில் அடங்கிக் கிடந்தநாடுகள் விடுதலை வேண்டிப் போராட ஆரம்பித்தன, தேசியக் கிளர்ச்சிகள் ஆங்காங்கு முளைத்தன. பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்து, மொராக்கோ, துனிசியா, அல்ஜிரியா ஆகிய பகுதிகளில் மக்கள் கிளர்ச்சி தொடங்கிவிட்டனர். மக்கள் தொடுத்த கிளர்ச்சியின் ஒரு பகுதியே, துனிசு நாட்டு பே மன்னர் அரண்மனையை விட்டு வெளியேற்றப் பட்டார், நாட்டைவிட்டு விரட்டப் பட்டார். மன்னராட்சிமுறை மாற்றப்பட்டு, துனிசிய அரசு குடியாட்சிமுறையில் அமைக்கப் பட்டுள்ளது. பிரெஞ்சு ஆதிக்கத்தின் பிடியிலிருந்து துனிசியா முற்றிலும் விடுபடவில்லையென்றாலும், சுதந்தர அரசுக்காக மக்கள் நடத்திய கிளர்ச்சியில் ஒரு படி முன்னேற்றங் கண்டுள்ளனர், மன்னரை விரட்டிய தன்மையால்! இப்பொழுது பிரெஞ்சு பாதுகாப்புடன் கூடிய குடியரசு முறை, மக்கள் சபை ஒன்றால் நடத்தப் பட்டுவருகிறது.

காலவேகத்தைப்பார்க்காமல் கடிகாரங்களை மட்டும் பார்த்துக்கொண்டிருந்த பிரெஞ்சு நாட்டுமன்னன்முடி இழந்தான். அதேபோல் காலவேகத்தைக் கவனிக்காமல் கடிகாரங்களைப் பார்த்துக்கொண்டிருந்த வட ஆப்பிரிக்க மன்னர் விரட்டப் பட்டுள்ளார்.

வட ஆப்பிரிக்காவில் கொழுந்துவிட்டுள்ள விடுதலைக் கனலின் வேகத்தை பிரெஞ்சு ஏகாதிபத்தியம் இன்றும் சரிவர உணர்ந்தபாடில்லை. அல்ஜிரிய நாட்டில் கடும்போராட்டம் விடுதலை வீரர்களைச் சுட்டு வீழ்த்தும் கொடுமை நடைபெறுகிறது. விடுதலை வேட்கையை ஆயுத பலத்தைக் கொண்டு அடக்கிவிடலாம் எனப் பிரெஞ்சு ஆதிக்கக்காரர்கள் நினைக்கிறார்கள்.

துப்பாக்கிமுனைகளை எண்ணிவிட்டு அதனால் ஒரு நாட்டின் விடுதலை எழுச்சியை ஒடுக்கிவிடலாம் என நினைத்தால் அது வெறும் பகற் கனவுதான்.

அரண்மனையில் உட்கார்ந்து கடிகாரத்தின் முட்களைக் கவனித்துக் கொண்டிருந்த பிரெஞ்சு நாட்டு அரசனுக்கு நேர்ந்த கதியைப் பிரெஞ்சு அரசாங்கத்தினர் உணராமலிருக்க முடியாது. பழைய கடிகாரங்களை மன்னன் பாதுகாத்து வந்தான். அவனை வெளியேற்றி மக்கள் புதுக்கணக்குப்போட்டு விட்டார்கள்.

அதைப்போல் பழமையின் சின்னமாக-ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்ட பழைய காலத்து அறிகுறியாக ஏகாதிபத்தியம் இருக்கிறது. அதைப் பாதுகாக்க ஏகாதிபத்திய வாதிகள் மிகவும் முயன்று பார்க்கின்றனர். கால வேகத்தை உணராத மன்னர்களைப்போல, உலக மாறுதல்களின் வேகத்தை உணராமல் பழைய ஆதிக்க நினைப்பிலேயே இருக்கின்றனர்.

ஏகாதிபத்தியம் ஒரு பழைய கடிகாரம்-அதிலும் உள்ளே பல்சக்கரங்கள் உதிர்ந்து வெளியே முள் ஒடிந்துபோன பழைய கடிகாரம்! அதை வைத்துக்கொண்டு இன்றுள்ள காலவேகத்துடன் ஒன்றுபட்டு வரமுடியாது. 0

தி. மு. க. வின் இலட்சியம்!
கேரளத்தில் பவனிவரும் பொன்னான நாள்!

1957 செப்டம்பர் முதல்-தேதி

"திராவிட நாடு"

(மலையாளம்)

மாதமிருமுறை வெளியீடாக வெளிவருகிறது!

தி. மு. க. கேரள மாநிலக் குழுவின் கொள்கை விளக்க ஏடு.

மக்கள் ஆதரவை எதிர்பார்க்கிறோம்!

முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை!

விவரங்களுக்கு:
நிர்வாகி,
"திராவிட நாடு"
c/o திராவிட பப்ளிஷிங் ஸொஸைட்டி
தம்பானூர்,
திருவனந்தபுரம்-1.

இலக்கியம்

கண்ணீர் வெள்ளத்தில் காதலி!

★ இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. ★

மணம் புரிந்துகொண்டு இல்லற இன்பத்திலே இனிது திளைத்துக் கிடக்கின்றனர் அவ் இளங் காதலர்கள்.

தலைவன் ஒரு போர்வீரன். அவனது அறிவையும், ஆற்றலையும், வீரத்தையும், வெற்றிச் சிறப்பையும் எண்ணி எண்ணிப் பூரித்து அவனிடத்தில் அளவுக்கு மீறிய அன்பு காட்டி வருகிறாள் அத்தலைவி. அவளது தோற்றப் பொலிவாலும், தேன் மொழியாலும், இனிய பண்பாலும் கவரப்பட்ட தலைவன் அவளுக்கு ஒரு கவலையும் ஏற்படா வண்ணம் அவளோடு இணைபிரியாமலிருந்து அவளை ஓம்பி வருகிறான்.

காதலன் ஒரு போர்வீரன், அவன் எந்த நொடியிலும் போர் நிமித்தம் தனனைவிட்டுப் பிரிந்து செல்லக்கூடும் என்பதை மறந்தே காதலி வாழ்ந்து வருகிறாள். போர் நிகழ்ச்சி ஏதும் ஏற்படாததால் தலைவனும் சிலகாலம் வரையில் அவளைவிட்டுப் பிரிய வேண்டிய இன்றியமையாமை ஏற்படாமலேயே இருந்து வருகிறான்,

பகைமை காரணமாக மாற்றான்மீது போர் தொடுக்க வேண்டிய இன்றியமையாத நிலை தலைவனின் அரசனுக்கு ஏற்படுகிறது, அரசன் போருக்குப் புறப்படுவதற்கு ஆயத்தமாகும்படி நாட்டிலுள்ள போர் வீரர்களுக்கெல்லாம் செய்தியனுப்புகிறான். படைத்தலைவர்களெல்லாம் போர்வீரர்களின் அணி வகுப்புக்களை உருவாக்குவதில் மிக மும்முரமாக ஈடுபடுகின்றனர். யானைப்படையும், தேர்ப்படையும், குதிரைப் படையும், காலாட்படையும் அணி அணியாக திரளுகின்றன. போர்வீரர்களெல்லாம் போர்க்கருவிகளைச் செம்மைப்படுத்தி அவற்றைக் கூறியனவாக ஆக்கிக்கொள்ளும் பணியினை மேற்கொள்ளுகின்றனர்.

அரசன் போருக்கு அழைக்கிறான் என்ற செய்தியைக் கேட்டதும், கடமையை ஆற்றப் போகிறோம் என்ற மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தாலும், தன் அருமைக் காதலியை விட்டுப்பிரிய வேண்டி நேரிடுகிறதே என்பதைஎண்ணிக் கலங்குகிறான். இந்தச் செய்தியை எப்படித்தலைவிக்கு உணர்த்துவது என்று வழி தெரியாமல் திகைக்கிறான்.

தனது பிரிவை அவள் அறிவாளேயானால், அதனைத் தாங்கிக்கொள்ள மாட்டாள், தன்னை எந்த வகையிலும் தடுத்து நிறுத்தி விடுவாள், அவளுடைய கண்ணீருக்கு அஞ்சிக் கடமையை ஆற்ற முடியாமற் போய்விடுமே என்றவாறெல்லாம் கலக்கத்தில் ஆழ்கிறான்.

தலைவன் நாள் தோறும் காலையில் எழுந்தவுடன் வேலினை எடுப்பதும், அதன் மீது படிந்திருக்கும் புழுதியைத் துடைப்பதும், அதனை கூர்மையாக்குவதும், அதற்கு நெய் தடவி வைப்பதும், கேடயத்தை எடுப்பதும், அதற்கு மணிகள் கட்டி மயிற் பீலி சூட்டி அழகாக்குவதும் ஆன செயல்களில் ஈடுபடுகிறான், தலைவன், தான் போருக்குப் புறப்பட இருப்பதைத் தலைவி குறிப்பாலாவது மெல்லமெல்ல உணர்ந்து கொள்ளட்டும் என்ற கருத்தில் மேற்கண்ட செயல்களைத் தொடர்ந்து சில நாட்களாகச் செய்து வருகிறான்.

தான் பிரியும் காலத்தில் தலைவிக்கு வருத்தம் ஏற்படக் கூடாதென்று கருதி அவளது உறுப்பு நலன்களையும், தோற்றப் பொலிவையும், நடையுடை நடிப்புக்களையும், இனியமொழியையும், அன்பு காட்டும் தன்மையையும் பலபடப் பாராட்டிப் புகழ்ந்து கூறுகிறான். தலைவன் வழக்கம் போலில்லாமல் மிகவான அன்பைக் காட்டித் தன்னைப் போற்றிப் பாராட்டுவது கண்டு உளம் பூரித்துப் போகிறாள்.

தலைவன் வேலையும், கேடயத்தையும் நாள்தோறும் செம்மைப் படுத்துவது எதற்கு என்று தலைவியால் அறிந்து கொள்ள முடியவில்லை.

"எதற்காக வேலையும், கேடயத்தையும் அடிக்கடி துடைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று அவள் கேட்கிறாள்.

"செம்மைப் படுத்தி வைத்தால் இவை பழுது படாமல் இருக்குமே என்று கருதித் தான் இவற்றைத் துடைத்து வைக்கிறேன்!" என்று அவன் மறுமொழி புகல்கிறான். அவளும் உடனிருந்து நாள்தோறும் அவனுக்கு உதவி செய்கிறாள்.

போர்ப்படைகள் மாற்றான் மீது படையெடுக்கும் நாள் வருகிறது. அரசன் வீரர்களையெல்லாம் பாசறைக்கு அழைக்கிறான். வீரர்களெல்லாம் புலிகளைப் போல் சீறி யெழுந்து வந்து பாசறையில் குழுமுகிறார்கள்.

தலைவன், தன் அருமைக் காதலியிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டால் பிரிய அவள் விடை தர மாட்டாள் என்று எண்ணி, விடியற் காலையில், அவள் உறங்கிக் கொண்டிருக்கும் போது, மெல்ல எழுந்து, வேலையும் கேடயத்தையும் கையிலேந்திக் கொண்டு, அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் புறப்படுகிறான்.

பொழுது விடிந்ததும் தலைவி எழுந்து தலைவனைக் காணாமல் திகைத்துப் போகிறாள். அங்குமிங்கும் தேடுகிறாள். தெருப் பக்கமும், புழக்கடைப் பக்கமும் மீண்டும் மீண்டும் போய்ப்பார்க்கிறாள் அவனைக் காண முடியவில்லை. அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடத்தில் தன் காதலனைப் பற்றி உசாவுகிறாள். அரசன் அழைக்கப் போயிருப்பான், விரைவில் வந்து விடுவான் என்று மற்றவர்கள் கூறுகிறார்கள். மற்றவர்கள் கூறும் கூற்றினை வைத்துக் கொண்டு கணவன் எப்படியும் வந்து விடுவான் என்ற நம்பிக்கையில் மன அமைதி பெறுகிறாள்.

தலைவி மாலை வரையிலும் பொறுத்திருந்து பார்த்து விட்டுத் தெருப்பக்கம் வந்து வழிகளின் மேல் விழி வைத்து நிற்கிறாள்.

தெருவில் நடமாடுவோர், அரசன் மாற்றான்மீது போர் தொடுக்க எண்ணிப் போர்ப் படைகளைத் திரட்டியிருப்பது குறித்தும், போர்முரசு ஒலிக்க துத்துபியும் எக்காளமும் கொம்பும் முழங்கப் போர்ப் படைகள் காலையில் புறப்பட்டுச் சென்று இருப்பது குறித்தும் பேசிக் கொள்கிறார்கள். அத்தகையச் சொற்களைச்செவி மடுத்த தலைவி வீழ்ந்தடித்து ஓடி அறையில் தலைவன் வைத்திருந்த வேலும், கேடயமும் அங்கேயே வைக்கப் பட்டிருக்கின்றனவா என்று பார்க்கிறாள். வேலும், கேடயமும் அவ்விடத்தில் இல்லாமற் போகவே, தலைவி அப்படியே மூர்ச்சையாகி கீழே விழுகிறாள். தலைவன் போர்ப்படையோடு போர்க்களம் போய்விட்டான் என்பதை அறிந்துகொள்கிறாள். அந்த நிலைமையை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்ல; எனவேதான் அவள் மூர்ச்சையாகி விழுந்து விடுகிறாள்.

சிறிது நேரம் கழித்து மூர்ச்சை தெளிந்தபிறகு பிரிவாற்றாமையை எண்ணி எண்ணி, கண்களில் நீர்வழிய அழத் தொடங்குகிறாள்.

தலைவியை பார்த்துவிட்டுச் செல்லலாம் என்ற நோக்கத்தோடு தோழி தலைவியின் வீட்டிற்கு இயல்பாக வருகிறாள். தலைவி கண்களில் நீர்வழிய அழுது கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போகிறாள்.

தோழி தலைவியின் அருகே வந்து, அவளை அணைத்துக் கொண்டு "ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது? சொல்லடி! ஏன அழுகிறாய்?" என்று அவளது கண்ணீரைத் துடைத்துக்கொண்டே கேட்கிறாள்.

தலைவி கண்களில் நீர் பொங்கி வழிய மேலும் மேலும் மிகவாக விம்மி விம்மி அழத் தொடங்குகிறாள்.

"வெள்ளம் போன்று ஏன் இப்படிக் கண்ணீர் வடிக்கின்றாய்? மைதடவப்பட்ட உன் அழகான கண்கள் இப்படியா பாழாக வேண்டும்? கண்ணின் பார்வை தோன்றாதபடி கண்ணீர் வெள்ளம் அதனை மறைத்து விட்டதே! ஏது நடந்தது, என்ன நடந்தது என்றுதான் சொல்லேனடி! ஓவியர்கள் பார்த்து எழுதுதற்கேற்ற உன் அழகான கண்களில் இப்படி நீர் வடியலாமா?" என்று தோழி வினவி விளக்கம் கேட்கிறாள்.

"என் காதலர் பிரிந்து போய் விட்டார்! நான் என்ன செய்யப் போகிறேன் நான் எப்படி உயிர் வாழ்வேன்?" என்று கூறி தலைவி கோவென அழுகிறாள்.

"எப்பொழுது பிரிந்து போனார்?" என்று தோழி வினவுகிறாள்.

"இன்று விடியற்காலையில் எனக்குத் தெரியாமல், நான் தூங்கிக் கொண்டிருக்கும் போதுதான் போய்விட்டாரடி! நான் எப்படி அவரை விட்டுப் பிரிந்து வாழ்வேன்!" என்று கூறி, தலைவி புலம்புகிறாள்.

"எங்கே போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தார்?" என்று தோழி கேட்கிறாள்.

(10-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை

மரிகோ

ஆங்கிலத்தில்;
பேர்ல் எசு. பக்.

தமிழில்:
நாஞ்சில், செ. அன்பெழில்.

குளிரை அள்ளிவந்த தென்றல், திரையை விலக்கிவிட்டு, பலகணி வழியாக என் அறையினுள் நுழைந்தது. கோடைக்கும் குளிருக்கும் இடைப்பட்ட இரண்டுங் கெட்ட ஒரு காலநிலை நியூயார்க் நகரை அன்று வளைத்துக் கொண்டிருந்தது. ஆரம்பித்து வைத்து முற்றுப்பெறாத நிலையில் இருந்த நாவலை முடிக்கும் பணியில் நான் ஈடுபட்டிருந்தேன். அந்த பெருங்கதைக்கு உயிரோட்டமாக விளங்கிய பாத்திரங்கள் ஒவ்வொருவரும் செத்துக் கொண்டிருந்தனர். கதையும் எதிர்பார்த்ததற்கு மாறாக நீண்டு பெருத்து ஏனோதானோ என்ற நிலையில் வளர்ந்து கொண்டிருந்தது. 'ஏன்தான் இதைத் துவக்கினேம்?'' என்று நானே சலித்துக்கொண்டேன். சில அலுவல்களை முன்னிட்டு நியூயார்க் நகரில் நான் தங்கியிருந்தேன். எனது அன்றைய அலுவல்களையும் நான் சந்திக்கவேண்டியவர்களின் பெயர்களையும் தாங்கிக் கொண்டிருந்த ஒரு சிட்டு, என் எதிரே கடமையை நினைவூட்டிக் கொண்டிருந்தது. வானொலி நாடகம் ஒன்றின் ஒப்பந்தம் குறித்துப் பேச வரும் வழக்கறிஞர், நாற்காலிக்குப் புதிய மெத்தை போடுவதற்காக வரும் நங்கை, ஒக்கினவாவிலிருந்துவரும் ஒரு அமெரிக்க டாக்டர் இவர்களையெல்லாம் இன்னின்ன நேரத்தில் நான் சந்திக்கவேண்டும் என்பதை நினைவூட்டிக் கொண்டிருந்த சிட்டும் என் சலிப்பையே வளர்த்தது.

வழக்கறிஞரும் அந்த வனிதையும் வந்து சென்றனர். கருமை பூசிக்கொண்டிருந்த வானம் மழைத் துளிகளை உதிர்க்க ஆரம்பித்தது. சாரை சாரையாகச் சென்றுகொண்டிருந்த மக்கள் கூட்டம் குடைகளுக்கு உள்ளேயும், கடைகளுக்கு முன்னாலும் பதுங்கிக் கொண்டது. போக்குவரத்து நெருக்கடி நிறைந்த அந்த தெருவில் ஒருவகை அமைதி நிலவியது. நிறுத்தப்பட்டிருந்த வாடகைக் கார்களெல்லாம் மழையில் நனைந்துகொண்டிருந்தன. "அந்த டாக்டரை எதற்காக நாம் சந்திக்கவேண்டும்'' என்று சலிப்பு ஊட்டிய எண்ணம் என் உள்ளத்தில் அவர் மேல் ஒருவகை வெறுப்பை வளர்த்தது.

ஒக்கினவா ஜப்பான் நாட்டை ஒட்டியிருக்கும் ஒரு சிறிய தீவு. ஜப்பானியர், சீனர், மலேயா நாட்டார் இவர்கள்தாம் அத்தீவிலே மிகுதியாக வாழ்ந்தனர். அங்கு உழவர்களும் சில மீனவர்களும் சிறு கடை வியாபாரிகளும் எப்படியோ வாழ்க்கை இயந்திரத்தை ஓட்டிக் கொண்டிருந்தனர். காலத்தின் இன்பமயமான பகுதியிலுங்கூட அவர்கள் வாழ்வு ஒரு சோக காவியமாகத்தான் இருந்தது. பரந்து விரிந்து கிடக்கும் பாறைகளின்மேலே வண்டல் மண்ணைப் பரப்பி வயல்களாக மாற்றியிருந்தார்கள். வளமற்ற தகுதியற்ற இந்த வயல்களை நம்பித்தான மனித இனம் அங்கே வாழ முயன்றுகொண்டிருந்தது. அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையே நடந்து முடிந்த போர் கொண்டதுபோக, அக்கொடுமையிலே எஞ்சி நின்றவர்கட்குமட்டும் வீடு என்ற பெயரிலே சில குடிசைகள் இருந்தன. அவர்கள் கட்டியிருந்த மலிவான வீடுகள் அமெரிக்காவின் கோரக்குண்டு வீச்சிலே இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. போரின் முடிவு ஜப்பானுக்கு உரிமையாக இருந்த அத்தீவை அமெரிக்காவின் ஆளுகைக்கு உட்படுத்திவிட்டார்கள். வானம் அழுதுகொண்டிருந்த காலை நேரத்தில் அத்தீவைப் பற்றி நான் கேள்விப்பட்டிருந்த செய்திகளெல்லாம் என்னை சோகக்கடலில் மூழ்கடித்தன.

சரியாக 11-30க்கு கதவோரத்தில் யாரோ காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மணி அறிவித்தது. தேகக்கட்டும், திடகாத்திரத் தோற்றமும் கொண்ட ஓர் உருவம் காவற்காரன் வழிகாட்ட கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தது. என் முன்னால் இருந்த சிட்டைப் பார்த்தவாறே, "நீங்கள் டாக்டர்......'' என்றேன். என்னை முடிக்க விடவில்லை. என் முடியாத கேள்விக்கு 'ஆமாம்' என்று சொல்லி ஒரு முற்றுப்புள்ளி வைத்தார் அப்புதியவர். வணக்கம் செலுத்திவிட்டு பக்கத்தில் கிடந்த நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தபடியே பேசத்துவங்கினார்.

"உங்களுக்கு ஒக்கினவாவைப்பற்றி நான் சில சொல்ல வேண்டும்.''

"ஏன்; அந்த துன்பகரமான தீவைப்பற்றி அறிந்துகொள்வதிலே எனக்குத் துளியும் ஆசை இல்லை.'' என்றேன் சலிப்பு நிறைந்த குரலில்.

"ஒரே ஒரு வாய்ப்புத் தாருங்களேன்,'' வேண்டிக்கேட்டார் அந்த விடாக்கண்டர். நான் என்னை இரக்கமற்றவளாகக் காட்டிக்கொள்ள முனைந்தேன். அவருடைய நீலவிழிகளிடம் விட்டுக்கொடுக்கும் தன்மை சிறிதும் இல்லை. எவ்வளவு இரக்கமற்ற முறையில் நடந்துகொண்டோம்'' என்ற எண்ணம் என்னை வாட்ட நான் வேறு வழியில்லாமல் அவர் பேச்சுக்குச் செவிசாய்க்க ஒத்துக்கொண்டேன். இருந்தபோதிலும் என் பிறவிக்குணம், "இதனால் நம் இருவரின் நேரமும் வீணாகப் போகிறது'' என்று பேசவைத்தது.

என் மனநிலையை உணர்ந்ததாகவோ அதற்கு மதிப்பளித்ததாகவோ காட்டிக்கொள்ளாமலேயே ஒரு குறுநகையை இதழில் காட்டி அந்த நாற்காலியில் நீட்டி நிமிர்ந்தார். அவர் அழகர்கள் பட்டியலில் இடம் பெறவில்லையென்றாலும் வளர்ந்து உயர்ந்திருந்த அவர் தோற்றம் கவர்ச்சிகரமாக இருந்தது. நல்ல பண்பாட்டின் உறைவிடம் என்பதை அவர் வட்ட வடிவமான முகம் எடுத்துக் காட்டியது.

"குறிப்பிட்ட சிலராவது ஒக்கினவா பற்றி பேசவேண்டும் என்பது என் பேரவா,'' ஆவலோடு பேசினார்; "நீங்கள் ஒரு சிறந்த எழுத்தாளர். எனவே ஒக்கினவா பற்றி மக்கள் மத்தியில் உங்களால் விளக்கமாகக் கூறமுடியும்.''

"நான் மக்களிடம் ஏராளமான விஷயங்கள் குறித்து தாராளமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அதிகமாகச் சொல்வதை அவர்கள் ஆசையோடு ரசிக்க மாட்டார்கள்!'' என்று மறுத்துப் பேசினேன்.

என் விருப்பு வெறுப்புக்கு அசைந்து கொடுக்காத ஒரு கல்லாக இருந்தார் அவர். ஒக்கினவாவைப் பற்றி என்னிடம் பேசித் தீர்த்துவிடுவது என்ற உறுதிப்பாட்டோடு அவர் வந்திருக்கிறார் என்பதை நான் உணர்ந்து கொள்ளத் தவறவில்லை. அவர் பேச்சைக் கேட்க நான் மறுத்திருக்க வேண்டும், நான் மறுத்திருக்க முடியும், மறுக்கவும் செய்தேன். எனினும் சூழ்நிலை அவர் வாய்க்கு என்னை அவலாக்கிற்று.

"கதையைச் சொல்லுங்கள், ஆனால் உங்கள் பெயரைச் சொல்லவில்லையே எனக்கு,'' என்றேன்.

பீட்டர்சு என்பதுதான் அவருக்குரிய பெயர். அமெரிக்க மருத்துவ நிலையம் ஒன்றில் குட்டநோய் மருத்துவத்தில் தனிச்சிறப்போடு பணியாற்றியிருக்கிறார். தன்னால் முடிந்த அளவு அதிகமான நேரத்தைச் செலவு செய்து இந்த தொழுநோயைக் குணப்படுத்த புது மருந்து ஒன்றைக் கண்டுபிடிக்கும் துறையில் ஈடுபட்டார்; வெற்றிப்பாதையிலும் வேகமாக முன்னேறிக்கொண்டிருந்தார், தன் வாழ்நாளிலேயே அந்த அரு மருந்து எந்த விஞ்ஞானியாலாவது கண்டுபிடிக்கப்படும் என்று உறுதியாக நம்பினார். பாழாய்ப்போன போர்மட்டும் குறுக்கிடாமல் இருந்தால், மருந்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் பட்டியலில் இவர் பெயரும் இடம் பெற்றிருக்கும்.

தனிச்சிறப்போடு அவர் தொண்டாற்றி உலகப்போர் முடிந்தபிறகு ஒக்கினவா அவர் உழைப்பை நாடியது. ஒக்கினவா ஒரு சிதைந்த சித்திரம் என்பதை படைத்தலைவர் மூலம் அறிந்திருந்த டாக்டர் அங்கே நுழைவதற்குமுன் பணி புரிய உரிமைப் பத்திரமும் வாங்கிக்கொண்டார். ஒக்கினவா இயற்கை வஞ்சித்த இருண்ட நிலம். பள்ளிக்கூடங்களோ மருத்துவ நிலையங்களோ அங்கில்லை. குட்டரோகமும் குழப்பநிலையும்தான் அங்கே ஆட்சிபுரிந்தன. இவைதான் நண்பர்கள் ஒக்கினவாவைப் பற்றித் தந்த நற்சான்றுகள். இக்காட்சிகள் எல்லாம் டாக்டர் பீட்டர்சின் மனத்திரையில் திரைப்படம் போல் ஓடிக்கொண்டிருந்தன. முடிவில் 'அங்கே நம்மால் என்ன செய்யமுடியும்?' என்ற ஒரு கேள்வி அவர் இதயத்தைக் குடைந்து கொண்டிருந்தது. குட்டநோய் மருத்துவ நிலையம் ஒன்றைத்துவங்கி, பிணியால் துடித்துக்கொண்டு செத்துக் கொண்டிருக்கும் எண்ணற்ற உயிர்களுக்கு நல்வாழ்வு தருவதையே வேலைத் திட்டமாக அவர் தீட்டிக்கொண்டார்.

இச்செய்திகளையெல்லாம் நாற்காலியில் நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொண்டே பேசினார்.

"நான் அங்கே நுழைந்தபோது இடிந்து போன கட்டடங்களைக்கூடக் காணவில்லை. இடிந்துபோன வாழ்வுகளை-கண்ணீரும் கம்பலையுமாய் நின்ற எண்ணற்ற குட்ட நோயாளிகளைத்தான் பார்த்தேன். 'அங்கிங் கெனாதபடி எங்கும்,' வீடுகளிலும் வீதிகளிலும், பாதை ஓரங்களிலும் பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருந்தனர். யாருக்கும் தேவைப்படாத இரண்டு பெரிய குடிசைகளைத் தேடிப் பிடித்து என் மருத்துவ நிலையமாக்கிக்கொண்டேன். நோயாளிகளிடம் நானே வலியப்பேசி, நோய் நலமடைய வேண்டிய அவசியத்தைக்கூறி, அவர்கள் ஆர்வத்தைத் தூண்டி எத்தனை பேரை மருத்துவ நிலையத்திற்கு அழைத்து வரமுடியுமோ அத்தனை பேரையும் சேர்த்து வளைக்கும் வேலையிலே ஈடுபட்டேன்,'' என்று தன் துவக்க வேலைக்கு ஒரு பட்டியல் தந்தார்.

"அங்கேயிருந்த குட்டரோகிகள், வாழ்ந்து வந்த கிராமத்தையும், சார்ந்திருந்த குடும்பத்தையும் விட்டு மருத்துவ மனை வந்து சேர மனம் ஒப்பவில்லை, மறுத்தனர். அவர்களுள் பலருக்கு வீடும் இல்லை. ஒக்கினவா ஒரு சின்னஞ்சிறு பட்டிக்காடு, 'அல்லி நாடாக' விளங்கியது. பருவ மெருகு பூசிய

இளம் பாவையர் கழிந்த போரில் இறந்துபோன கணவன் மூலமும், வந்துபோகும் வாலிபர்களின் மோகவெறியாலும் பெற்ற குழந்தைகளோடு அப்பட்டிக்காட்டிலே வாழ்ந்து வந்தனர். போரில் சுற்றங்களை இழந்துவிட்ட அச்சேயிழையார் குழாம் சேர்ந்து வாழத் துடிதுடித்தது; அதன் மூலம் தன் செல்வக் குழந்தைகளை சீரோடு வளர்க்கவும் முயன்றது. பெரு நோய்க்கு அப்பெண்களில் பலர் இரையாகி இருந்தனர். வியாதிக்கு ஆட்படாதவர்கள் அவர்களை வெறுத்தொதுக்கி வாழ்வதிலே விருப்புக்காட்டி வந்தனர். அவர்கள் வாழ்விலே குறிக்கிட்ட நான் வருங்கால சந்ததிகளாகிய குழந்தைதளைக் காப்பாற்ற முடியும் என்று நம்பிக்கை யூட்டினேன். என்னை நம்பி மருத்துவமனை வந்த மங்கையர் கூட்டம் நான் அவர்கட்கு ஆதரவு தர வந்திருக்கிறேனேயன்றி அழிவு சூழ அல்ல என்ற கருத்தை மக்கள் மத்தியில் பரப்பியது. அவர்கள் செய்த பணி பிறரையும் மருத்துவ நிலையம் நோக்கி இழுத்துவந்தது.''

சரளமாக வந்துகொண்டிருந்த அவர் பேச்சு தடைப்பட்டது, இல்லை தயங்கி வந்தது. அவர் முகத்தில் இலேசாக செம்மை படர்ந்தது. அவரிடம் ஏற்பட்ட மாற்றம் என்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்து, அதன் காரணத்தை அறியும் ஆவலைத் தூண்டியது. ''எடுத்துக்காட்டாக நான் உங்களுக்கு அந்த மங்கையர் திலகம் மேரிகோவைப் பற்றிச் சொன்னால் போதும். அவள் வரலாறு உங்கட்கு சரியான விளக்கம் தரும். தயங்கிக்கொண்டிருந்த மக்கள் தாராளமாக வரத் துவங்கவே விரைவில் என் மருத்துவமனையில் இட நெருக்கடி உண்டானது. என்னைக்கண்டு பயந்த நிலைமை மாறி என்மேல் பாசம் கொள்ளும் நிலைமை ஏற்பட்டது.

எங்கே உள்ளதைச் சொன்னால் ஓடிவிடுவார்களோ என்று எண்ணிய எனக்கு, குட்ட நோயை முற்றிலும் மாற்றத் தக்க மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற உண்மையைக் கூறும் உள்ளமில்லை. 'சின்னஞ் சிறுவர்களைக் காப்பாற்றுவதற்காவது அந்த மருந்து சீக்கிரம் கண்டுபிடிக்கப்படும்,' என்ற நம்பிக்கை மட்டும் என் நெஞ்சில் நிலவியது. நான் நெருங்க முடியாத நோயாளிகள் சிலருள் மேரிகோவும் ஒருத்தி. என் உதவியாளர், ஜப்பானிய நண்பர் தந்த பட்டியலிலே மேரிகோ சவாதா என்று அவள் முழுப்பெயரும் பொறிக்கப் பட்டிருந்த காரணத்தால் அவள் அங்கே இருக்கிறாள் என்பதை மட்டும் நான் அறிய முடிந்தது. நான் ஒரு வாசல் வழியாக உள்ளே நுழையும் போதெல்லாம் அவள் மறு வாசல் வழியாக மறைந்து விடுவாள். பொன் மெருகேறிய மேனி, தங்க நிறக் கூந்தல், கருணை வடிவமான தோற்றம், கவின் மிகுந்த உருவம் இத்தனையும் நான் பார்த்தேன்; என்றாலும் அவள் எழில் கொஞ்சும் முகத்தை மட்டும் எனக்குக் காட்டவே இல்லை. நான் பார்த்த அளவில் அவள் உடலில் நோயின் அறிகுறி எதுவும் எனக்குத் தெரியவில்லை. மிகக் குறுகிய காலத்திற்கு முன்புதான் குட்டநோய் அந்த பட்டுப் பூச்சியைத் தொட்டிருக்கும் போலும்.

அவள் அச்சத்தை நீக்கி என் மருத்துவத்தில் மாறாத நம்பிக்கையை ஊட்டவேண்டிய பொறுப்பு என்னுடையதாயிற்று.

என் உதவியாளரிடமும் இது பற்றிச் சொல்லி பிறர் ஒத்துழைப்பையும் இப்பணிக்காகத் தேடித்தரக் கேட்டிருந்தேன். ஒரு நாள் விடுதியைச் சுற்றி வரும்பொழுது முதன் முறையாக இரண்டாவது இல்லத்தில் புகுந்தேன். மேரிகோ மருண்ட பார்வையோடு மான் போல் துள்ளி ஓடி மறைந்து விட்டதையும் நான் காணத் தவறவில்லை. டாக்டர் வருகிறார் என்பதை உணர்ந்த பிற பெண் நோயாளிகள் அந்தப் பெண்ணை பிடித்து வைத்திருந்தனர். அவள் வளைந்து, நெளிந்து, அசைந்து, ஆடி அவர்கள் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள பெரும் பாடுபட்டுக் கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் தன் கைகளுக்குள்ளே முகத்தைப் புதைத்துக் கொண்டாள். சூழ்ந்து நின்ற பெண்கள் அவள் கையை தாழ்த்தி விலக்கியும், நிமிர்ந்து பார்க்கவில்லை. கடைசியாக கை இலையிலிருந்து தலை நிமிர்ந்த ஒரு முக மலரைப் பார்த்தேன், வியந்தேன்!''

அவருடைய குரலிலே ஒருவித தடுமாற்றம் தழுவி நின்றது. ''கனிவான முகத்தில் தவழும் பொலிவு, கண்டோரைப் பற்றியிழுக்கும் அழகு, மீண்டும் பார்க்கத் தூண்டும் வனப்பு. அந்த எழிலோவியத்தை பார்த்துக் கொண்டிருப்பதில் தான் என்ன மகிழ்ச்சி? அந்த எல்லையற்ற இனம் தெரியாத இன்பத்தை நான் பெற்றேன். மங்கை ஒருத்தியை முறைத்துப் பார்க்கிறோமே என்பதையும் மறந்தேன். வில்போன்ற புருவத்தின் கீழே விளையாடிக் கொண்டிருந்த கயற் கண்கள், பிறையன்ன நெற்றியைத் தொட்டு நிற்கும் கண்ணாடிக் கன்னங்கள், இந்த வண்ணப் படைப்புகளைத் தாங்கியவாறு காண்போரின் எண்ணத்தை கவர்ந்துவிடும் மதிமுகம். அந்த எழிலாரும் ஏந்திழையை நான் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் தலை நிமிர்ந்து பார்க்காத காரணத்தால் 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கும் வாய்ப்பு, எனக்குக் கிட்டவில்லை. எனினும் நீண்டு கறுத்த புருவத்தின் கீழே நீந்தி விளையாடிக் கொண்டிருந்த கயல் விழிகளின் அழகை நான் கவனிக்கத் தவறவில்லை. வாரி விடப்பட்ட தலை மயிரை அவள் சேர்த்துக் கட்டியிருந்த புதுமை அழகுக்கு அணிசெய்தது. நான் பார்த்த அளவில் வியாதியின் அறிகுறியோ, விகாரமான வடுக்களோ ஏதும் அந்த மதி முகத்தில் இல்லை.''

''வழக்கம் போல என் கைகளிலே இரப்பர் கையுறைகள் மாட்டியிருந்ததும் நான் தொடும் போழுது; அச்சமும் வெட்கமும் ஆட்டிப் படைக்க மான்கன்று போல் மருண்டு நின்றாள். தலையை அசைத்தாள், இதழ் திறந்தது, ஏதோ பேச முயன்றாள்...'' பேச்சை நிறுத்தி விட்டு அரைவினாடி அமைதியாக இருந்தார் டாக்டர்.

''தென் பசிபிக் கடலில் தேடிக் கிடைத்த முத்து, ஒதுக்கித் தள்ள முடியாத ஒண்தொடி, தவிர்க்க முடியாத மலர் விழி......'' என்று நான் கேலியாக அடுக்கினேன்.

அவர் எங்கே விட்டார் என்பதை நினைவு படுத்திக் கொண்டார் போலும். மெல்லிய குரலிலே பேசினார். ''அவள் ஒரு தொழு நோய்க்காரி என்பதையும் சேர்த்துக் கொள்ளுங்கள், மறந்து விட்டீர்கள் போலும். எப்படி இருந்தால் என்ன, மறுவினாடி அந்த மணிப் புறா பறந்து விட்டது. அவளைப் பிடித்து வைத்திருந்த மாதர் கூட்டத்திலேயிருந்து உருகிப் போனது போல நழுவிப்போய் விட்டாள் அவள். அலைமோதும் கடற்கரை வழியாக அவள் ஓடிக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். 'போகட்டும் விட்டு விடுங்கள், நாளை பார்ப்போம்' என்று சொல்லி விட்டு அடுத்த இல்லத்தினுள் நுழைந்தேன். அந்த மாதர் கூட்டம் வேறு எதை எதையோ பற்றிப் பேசிக் கொண்டிருந்தது.

மறு நாள் காலை அவள் எ னைக் கண்டதும் ஓடவில் நான் முதல் இல்லத்தின் த வாசல் வழியாக நுழைந்தே அவள் புறவாசல் பக்கம் இரு தாள். பாய் ஒன்றின் மேல் உ கார்ந்திருந்த அவள் என்னை பார்த்தாளோ இல்லையே குதித்தோடி மறையத் துடி தாள். சூழ்ந்திருந்த பெண்க கைகளால் வேலி கட்டி அ தையலின் ஓட்டத்திற்கு தடை விதித்து நின்றன என்னைக் கண்டு அஞ்சி நடு கும் அவளுக்கு என்ன தே தல் மொழி கூறி ஆறுதல் த லாம் என்ற ஆராய்ச்சியோ அவளை அணுகினேன் வெள்ளை நிற மருத்துவர் அ கியை ஏன் அணிந்து கொண் டோம் என்று என்னையே நா வெறுத்துக்கொண்டேன் வெள்ளை நிறம் ஜப்பானி துக்கத்தை குறிக்கும் என்ப தான் உங்களுக்குத் தெரியுமே குட்ட நோயாளிகள் மத்தியி பணி புரியும் எந்த மருத்து வரும் இரப்பர் உறை கைகளி அணிந்து கொள்வது வழக்க தான். எனினும் கைகளி போட்டிருந்த இரப்பர் உறை யின் மீதும் என் வெறுப் படர்ந்து'' என்றார்.

தழ தழத்த அவர் குரல் தாங்கி நின்ற சோகம், பட படத்த நீல விழிகளில் தேங்கி நின்ற மோகம், இக் காட்சி ளைப் படம் பிடித்தது என் நெஞ்சில் ஒரு பாகம். இத்துய ரக் கதையைத் தொடர்ந்து கேட்பதை நான் விரும்பவில்லை. உலக துன்பங்களைப் போது மான அளவு நான் உணர்ந்தி ருந்தேன். மேலும் சோகத்தை சுமையாக்கிக் கொள்ள எனக்கு மனமில்லை. உடைந்த உள் ளத்தை உதறித் தள்ள கற்றி ருந்தேனே யல்லாமல் மேலும் அதை உருவாக்க நான் படிக்க வில்லை. கைக் கடிகாரத்தை பார்த்துக்கொண்டே ''ஏன் இந்த துயரக்கதையைக் கூறி என்னை துன்ப சாகரத்தில் மூழ் கடிக்கின்றீர்கள்'' என்று வருத்தத்தோடு கேட்டேன்.

தன் நீண்ட கைகளால் சை கை காட்டி 'பொறுங்கள்''



பெர்ல் பக்

பெர்ல் சைடன்சுடிரிக்கர் பக் என்ற முழுப் பெயருடைய இவ்வாசிரியர் அமெரிக்காவில் பிறந்து சீனாவில் வளர்த்தவர். தன் வாழ்வின், இளமைப் பருவம் முழுவது சீனாவில் வாழ்ந்து விட்ட காரணத்தால் ஆரம்ப காலத்தில் இவர் எழுதிய சிறுகதைகளும் நாவல்களும் சீன சூழ் நிலைகளையும், சீன பாத்திரங்களையுமே கொண்டு திகழ்ந்தன. அவைகளுள் ஒன்றான 'நன்னிலம்' (குட் எர்த்) என்ற நாவல் 1931ல் வெளி வந்தது. அமெரிக்க இலக்கத்தில் சிறந்த இடத்தை பெற்ற இந்த நாவலின் மதிப்பு ''புலிட்சர்'' பரிசை பெற்றதன் மூலம் மேலும் உயர்ந்தது. 1938ல் நோபல் பரிசு பெற்றதன் மூலம் இவ்வாசிரியரின் புகழ் அகில உலகிலும் விரிந்து பரந்தது. இவ்வாசிரியர் 'அமெரிக்க வார இதழ்' என்ற ஏட்டின் மூலம் தந்த இச்சிறு கதையில் அணுக்குண்டால் ஜப்பான் பெற்ற அழிவையும், அதனால் பரவிய நோயையும், அன்பால் கட்டுண்ட இரு உள்ளங்களையும், அழகில் மயங்கிய மருத்துவர் அன்பில் திளைத்த நிலையையும் புகழத்தக்க முறையில் உருவாக்கிக் காட்டியுள்ளார்.

...ன்று கெஞ்சினார். "சோகமே ...ருவான அந்தமேரி கோவின் ...தையை நீங்கள் அவசியம் ...றிந்தாக வேண்டும். பரிதா...த்திற்குரிய பாவை அவள். ...ட்டரோகிகளின் மத்தியில் ...ந்த கட்டழகி தலையை வேறு ...க்கம் திருப்பியவாறு நின்று ...காண்டிருந்தாள். அன்று ...வள் ஓடிஒளியவில்லை. ஆடா...ல் அசையாமல் நின்றாள். ...ன் அவளுக்குத் தொண்டு ...ய்யவும், துணை புரியவும் ...ான் வந்திருக்கிறேன் என் ...தை எப்படி அவளுக்கு ...ணர்த்த முடியும்? என்னை ...வள் நம்பும்படி செய்வது ...ப்படி? சிந்தனையில் ஆழ்ந் ...தன். எப்படி அந்தப்புதிய ... என் மூளைக்குத் தட்டுப் ...ட்டதோ எனக்குத் தெரி...து—ஆனால் அது என்னால் ...ம்கண்டு அளந்துசொல்ல ...டியாத ஒரு உள்ளுணர்ச்சி...ன் விளைவாகத்தான் இருக் ...ம். என்கரங்களை கோத்துக் ...காண்டிருந்த இரப்பர் உறை...ள என்னை அறியாமலே ...ழற்றி எறிந்தேன். வண்ணங் ...ள் காட்டும் அவள் கண்ணு ...க் கன்னங்களை என் கை...கால் தாங்கி மெதுவாக, மிக ...மெதுவாக அந்தமதி முகத்தை ...என்முகத்திற்கு நேராகத்திருப் ...பினேன். இதற்கு முன் எந்த ...வெள்ளை டாக்டரும் வெறும் ...கையால் வியாதிபிடித்த பெண் ...ணைத் தீண்டியது கிடையாது. ...லையாக நின்ற அவளின் அலைபாயும் கண்களிலே என் நிலையைக் கண்டேன். என் உள்ளங்கையால் அவளுடைய கதுப்புமிக்க கன்னங்களை வருடினேன். அதேசைககளால் என் கன்னங்களையும் வருடிக்கொண்டேன். என்னைப் புரிந்துகொண்டாள் அப்பூங்கொடி. தன் அகன்ற விழிகளால் அங்கு நின்ற குட்டரோகிகளைப் பார்த்து ஏதோ பேசினாள். என் உதவியாளரை அழைத்து என்ன பேசுகிறாள் என்பதை மொழி பெயர்த்துக் கேட்டேன் 'தூய்மையாக இருப்பதால் அவளைத் தொடுவதற்கு நீங்கள் தயங்கவில்லையாம் என்றார் அவர்."

மழைகொட்டு கொட்டென்று கொட்டியது. போக்குவரத்தால் நகரில் ஏற்படும் சத்தத்தை அமிழ்த்திக்கொண்டு இடி குமுறியது. நான் நியூயார்க நகரில் இருப்பதையே மறந்து விட்டேன். எனது விருந்தாளி என்னை திரைக்கடலுக்கப்பால் அத்தீவிற்கே கொண்டு சென்று விட்டார்.

ஒக்கினவா டாக்டர் விட்ட இடத்திலிருந்து கதையைத் தொடர்ந்தார்; "மேரிகோ மாறிவிட்டாள் என்று நீங்கள் கருதினால் உங்களையே நீங்கள் ஏமாற்றிக்கொண்டவர்களாவீர்கள். அதன்பிறகு என்னைக் கண்டதும் அவள் நின்றஇடம் விட்டு ஓடிவிடுவதில்லை என்பது உண்மைதான். ஆனால் அவள் மற்ற பெண்களைத் திரையாக்கிக் கொண்டு பின்னால் மறைந்து கொள்வாள். டாக்டர் என்ற முறையில் நான் அவளை அழைக்கும்பொழுது கையால் முகத்தை மறைத்துக் கொண்டு பேசாமடந்தையாக நிற்பாள். அவள் விழிகளுக்கு எழில்மிகுந்த ஓவியமாக இருந்தாள், இருக்கிறாள் என்றாலும் நான் ஒரு டாக்டராகப் பணியாற்றுகிறேன் என்பதை நீங்கள் உணரவேண்டும். அவளுக்கு மருத்துவப் பணிபுரிவதற்கு முன்னதாக நான் அவள் மனதில் என் மேல் நம்பிக்கையை ஊட்டவேண்டும். அவள் உடலில் சில மறைவான அங்கங்களை இப்பயங்கார நோய் சுவைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று கற்பனை செய்து பார்ப்பதுகூட எனக்கு மனக்குழப்பத்தை உண்டாக்கி விடும் போலிருக்கிறது. குட்டரோக நிவாரண மருந்து அதிவிரைவில் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்பதிலே எனக்கு ஆர்வமும் அக்கரையும் வளர்ந்து விட்டிருக்கிறது. என்னோடு முன்னால் பணியாற்றிய டாக்டர்களுக்குக் கடிதம் எழுதி ஆய்வுக்களத்தில் ஆராய்ச்சி பெற்றிருக்கும் முன்னேற்றத்தை அறிவிக்க வேண்டினேன். நான் ஆய்வுகளத்திலிருந்து வந்திராவிட்டால் இதற்குள் ஆராய்ச்சியைத் துரிதப்படுத்தி இந்த அருமருந்தை தயாரித்திருக்கலாமே என்று என்னையே நான் நொந்து கொண்டேன். நான் மட்டும் ஒக்கினவா போகவில்லையானால் மேரிகோவும் அந்த குட்டரோகி கூட்டமும் பட்டி தொட்டிகளிலே பரிதாபமாக பவனி வந்து கொண்டிருக்கும்.

என் கவனம் அவர் கதையில் பதிந்திருக்கிறதா என்பதை அறிய வேண்டி சிறிது நிறுத்தினார். நான் கவனித்துக்கொண்டுதான் இருந்தேன். தொடர்ந்தார்; "ஆசிய நாட்டுப் பெண்களுக்குக் குடும்பம் தவிர்க்க முடியாத ஒன்று. சுற்றமில்லாது வாழுகின்ற பெண்கள் சூழ்நிலையால் கொடுமைக்கு இரையாக்கப்படுவது வாடிக்கை. ஆனால் ஏகாந்தமாகவிடப்பட்ட மேரிக்கோ போன்ற பெண்கள் பலர் கூட்டமாகச் சேர்ந்து ஒருவருக்கொருவர் உறுதுணையாகவும், பாதுகாப்பாகவும் வாழ்ந்து வந்தனர். ஆகையால்..." பேச்சை நிறுத்திவிட்டு முகத்தைச் சுளித்தார். சிந்தனையில் மூழ்கியிருப்பதன் ரேகை அவர் முகத்தில் படர்ந்தது.

"ஆகையால்...?" விட்ட இடத்தை அவருக்கு நினைவு படுத்தினேன்.

சாய்ந்திருந்த தலையை உயத்திக்கொண்டு கதையைத் தொடர்ந்தார். "ஆகையால் ...ஆமாம்...என் மேல் நம்பிக்கை ஏற்படும வகையில் எப்படி நான் மேரிகோவை மாற்ற முடியும். ஒரு நாள் ஏதோ ஒரு பெண்ணின் புதிதாகப் பிறந்த குழந்தைக்காக மேரிகோ சட்டை ஒன்று தைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவளுக்கும் அன்று என்னிடம் பேசவேண்டும் போலிருந்தது போலும். இந்த இடைக்காலத்திற்குள் அவர்கள் பேசும் மொழியை புரிந்து கொள்ளும் அளவிற்கு தெரிந்துகொண்ட காரணத்தால் அவளோடு பேச எனக்கு மொழி பெயர்ப்பாளர் தேவைபடவில்லை. அப்பஞ்சிளங் குழந்தைக்கு இப்புது சட்டையை அணிவதற்கு முன்னால் சட்டை சுத்தமாக வெளுக்கப் பட வேண்டும் என்று கூறினாள். "நானே அதை சுத்தமாக வெளுத்து அணியச் செய்வேன்' என்று ஆணையிட்டுக் கொடுத்தேன். தன் உடம்பிலே பற்றியிருக்கும் நோய் அக்குழந்தையின் தளிர் உடலிலும் தாவிவிடக்கூடாது என்பதிலேதான் எவ்வளவு அக்கரை! என்னை முழுக்க அவள் நம்பவேண்டும் என்ற ஆசையின் காரணத்தால் அவள் கையிலிருந்த ஆடையை நான் வாங்கிப் பார்த்தேன் கல்லெண்ணத்தின் அறிகுறியாக சிறிய ஒரு சிவப்பு நிறச் சேவலை அவள் அந்த ஆடையினமேல் பின்னிக்கொண்டிருந்தாள். நெருக்கமாகப் பின்னப்பட்டிருந்த இழையின் அமைப்பு நேர்த்தியாகவுமிருந்தது. அவளைப் பாராட்டினேன் அவள் திறமைக்குப் புகழ் பாடிக் கொண்டே அந்த சட்டைய அவள் கையில் கொடுத்தேன். எனக்குத் திடீரென்று ஒருயோசனை தோன்றியது. 'இதுபோல எழில் மிக்க சட்டையொன்று எனக்குப்பின்னித்தருமாறு கேட்கவேண்டும் நான் டாக்டரென்ற காரணத்தால் அவள் மறுக்கமாட்டாள்.' என்று என் எண்ணம் ஓடியது. "மேரிகோ எனக்கும் இதுபோல் ஒரு சட்டை தைத்துக் கொடுப்பாயா?" ஆவல் அலைமோத கேட்டேன். நிறைமையோடு பதில்தர முடியாத அளவிற்கு அவள் திகைத்து நின்றாள். அவளுடைய அகன்ற விழிகள் என்னை விழுங்கிவிடுவதுபோல் பார்த்தன. அந்த மென்மையான முகத்திலே ஒரு தடுமாற்றம் படர்ந்தது. என் சட்டையைச் சுற்றிக் காட்டி 'இதுபோல் எனக்கு ஒன்று வேண்டும். புதிதாக தைத்து வரவேண்டுமென்றால் என்வீடு இங்கிருந்து வெகு தூரத்திற்கு அப்பால் இருக்கிறது;' நான் விளக்கம் கொடுத்தேன். அவள் முகம் இலேசாக வெளுத்தது. அவள் மொழி என் வேண்டுகோளை வெறுத்தது. 'முடியாது' என்ற சொல்லை அவள் உதடு உதிர்த்தது. 'உன்னால் முடியும் இதுபோல ஒரு பழைய சட்டை தருகிறேன், வைத்துக்கொள். அதைப் பிரித்தெடுத்து இதுபோல் ஒரு புதிய சட்டை தைத்துக் கொடு;' என்றேன். சில நாட்களுக்குள் நீலநிறத் துணி ஒன்றை அவளிடம் கொடுத்தேன். பழைய சட்டை ஒன்றும் அளவுக்காகத் தந்தேன். இதற்குள்ளாக அவள் மற்ற பெண்களிடமும் சொல்லிவிட்டிருக்கிறாள். அவர்கள் என்னை சூழ்ந்து நின்று பறவைக்கூட்டம்போல கீச்சுக்குரலிலே பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் பழைய சட்டையையும், புதிய துணியையும் தொட்டுத் தொட்டுப் பார்த்தனர். அவைகளின்மேல் ஆராய்ச்சி நடத்தினர் போலும். மேரிகோ எதையும் தொடவே இல்லை. அவளுடைய முகத்திலே கவலையின் சாயல் படர்ந்தது. 'எப்பொழுது தைத்துத் தருவாய். எனக்கு மிகவிரைவில் தேவைப்படும்' என்று கூடியிருந்த பெண்களிடம் பேசுவதுபோல் அவளுக்கு உணர்த்தினேன். அவர்கள் அனைவரும் சிரித்தனர். பாதிகுருடான விழிகளும், பார்க்க சகிக்காத முகங்களும் என்னை எதிட்டுப் பார்த்தன. பறவைகளைப் போல ஒருவர்க்கொருவர் கலந்து பேசி சளசளவென்று சத்தத்தைக் கிளப்பிக் கொண்டிருந்தனர். அவர்களுள் வயதுமுதிர்ந்தவள் தைரியமாகப் பேசினாள், "டாக்டர் அன்று எங்கள் யாரிடமும் இப்பொழுது தையல் இயந்திரம் இல்லை. வெளிநாட்டிலிருந்து புதியதையல் இயந்திரம் ஒன்று தருவித்துத் தந்தால் மூன்று நாட்களுக்குள் சட்டையை முடித்துத் தருகிறோம்," என்றாள். நிச்சயமாக இயந்திரம் வரவழைத்துத் தரு

...ரத்தைத் தூக்கும் பலம்

...டத்தில் இருப்பதைப்போல ஒரு ...ரிய மரத்தைத் தூக்கும் பலம் ...ங்களுக்கும் இருக்கிறது. அதற்கு ...த்தகைய சாதனையையும் செய்ய ...வண்டியதில்லை. நீங்கள் செய்ய ...வண்டியதெல்லாம், பலம் தேடுவ...தல்ல, தூக்கவேண்டிய ஒருவகை ...த்தைத் தேடுவதுதான். ...பால்சா" என்ற மரக்கட்டைதான் ...லகிலேயே மிக லேசானது. ஒரு ...ரிய அளவுள்ள மரப்பகுதியைக் ...டச் சிரமமின்றி தூக்கிப் போட...ம்.

"பால்சா" மரம் ஒரு கனஅடிக்கு ... பவுண்டு எடைதான் இருக்கும்.

உலகில் மிகப் பளுவான மரம், "கருப்பிரும்பு மரம்" (பிளாக் ...யர்ன் வுட்) என்பதாகும். அது ...ன அடிக்கு 93 பவுண்டு எடை ...ருக்கும்.

கிறேன். ஆனால் தையல் மிக நேர்த்தியாக இருக்கவேண்டும்," என்றேன்.

அவர்கள் அனைவரும் சிரித்தபடியே சிறப்பான முறையில் நடத்தித் தருவதாக வாக்களித்தனர். மேரிகோவுக்கு ஒரு புதிய தையல் இயந்திரம் வாங்கித் தரவேண்டும் என்ற எண்ணத்தை நெஞ்சில் தாங்கிக் கொண்டு அந்த மகளிர் கூட்டத்தை விட்டு விலகிச் சென்று கொண்டிருந்தேன். பிணி நீங்கி அவள் வெளியேகும் பொழுது அது அவள் வாழ்விற்கு வழி காட்டியாகவும் இருக்குமென்றுஎண்ணினேன். நான் வீட்டை விட்டு வெளியே வந்தபொழுது மேரிகோ எனக்காகவாசலில் காத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். என்னை சந்திக்க வேண்டி அவள் அந்தவீட்டை எத்தனையோமுறை சுற்றிச் சுற்றி வந்திருக்கிருள். மருண்ட மானைப் போல என்னைக் கண்டதும் ஓடி ஒளியும் மேரிகோ அன்பு ததும்பக் கிளிபோல என்னை நாடி வந்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"மேரிகோ தானா இது!" ஆச்சரியமாகக் கேட்டேன். வெட்கத்தால் முகம் சிவந்தது, செம்பவள இதழ் திறந்தது. என்னையும் நோக்கினுள், ஏதும் அறியாதவள் போல வெளியுலகையும் பார்த்தாள். 'உங்கள் சட்டை தைக்கப்பட்டதும் சலவை செய்யாமல் நீங்கள் அதை அணியக் கூடாது, என்ன?' அன்பு கனியக் கேட்டாள். மற்ற குட்ட ரோகப் பெண்களின் அருவருப்பான கரங்களை அவள் நினைத்துக் கொண்டாள் போலும். அன்பின் அடித்தளத்திலே எங்கள் உள்ளங்கள் கலந்து உறவாடிய அந்த வினாடி என் நெஞ்சை விட்டு அகலாது; நினைப்பிலிருந்து மாறாது. அந்த ஒரு வினாடியை மணிக் கூறாக, நாளாக, ஆண்டாக நீட்ட வேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன். 'அப்படியே ஆகட்டும் எவ்வளவு அழகாக அந்த சட்டையை நீ தைக்க முடியும் என்பதை எண்ணிப் பார் மேரிகோ எனக்காக நீயே அதை செய்து கொடு!' வார்த்தைகள் ஒவ்வொன்றும் புதிய மெருகோடு வெளிவந்தன. அவள் விழிகளிலே ஒரு புது ஒளி பரவி நின்றது. அவள் தலை அசைந்தது. வலையில் சிக்கிய விலாங்கு போல நழுவிச் சென்றுள்." கதையை நிறுத்தி விட்டு புகை பிடிக்க ஆரம்பித்தார் டாக்டர்.

"இந்த சிறிய நிகழ்ச்சியை பெரிய கதையாகவே ஆக்கி விட்டேன், அப்படித்தானே?" என் சோர்வுக்கு அவர் தந்த மருந்து போலும்.

"பரவாயில்லை, சொல்லுங்கள்" என்றேன் ஒரு முட்டாள் போல.

சிறிது நேரம் சிந்தனையை எங்கோ ஓட விட்டுக் கொண்டிருந்த அவர் சாய்ந்திருந்த தன் உடலை சிறிது நிமிர்த்திக் கொண்டு, "ஒரு பெண்ணின் நம்பிக்கையைப் பெறுவதென்பது ஆச்சரியமான ஒன்றுதான்" என்றார். நான் ஆமோதித்தேன். "தாயகத்தில் பலருக்குக் கடிதங்கள் வரைந்தேன். புதுமையான நல்ல நிலையில் உள்ள தையல் இயந்திரத்தோடு நான் உள்ளே நுழைந்ததும் அந்த ஏந்திழையார் கூட்டம் என்னை சூழ்ந்து கொண்டது. மேரிகோவுக்கே அதை தனியுடைமை யாக்க முடியவில்லை, இயந்திரம் மங்கையார் குழாத்தின் பொதுவுடமை யாயிற்று. அப் புதிய இயந்திரம் அவர்கட்கு பொற்சுரங்கமாகத் தோன்றியது போலும். கடந்த போருக்குப் பிறகு இது போன்ற இயந்திரம் எதையும் காணாத அப்பெண்கள் அதைத் தூக்கிச் சென்று மூங்கில் மேசையின் மேல் வைத்து சுற்றியிருந்து அதற்குப் புகழ் பாடினர். கூட்டத்தின் ஓரத்திலே நின்று குறுநகை புரிந்து கொண்டிருந்தாள் மேரிகோ. அவளும் அந்த இயந்திரத்தைப் பற்றித்தான் எண்ணிக் கொண்டிருந்திருக்க வேண்டும். அவள் இதயத்தை திருடிக் கொண்டு இயந்திரத்தைத் தந்து விட்டு வந்தேன்."

"சட்டை தைக்கக் கொடுத்திருந்தீர்களே, என்னவாயிற்று" ஆர்வத்தால் இடை மறித்தேன். இன்னெரு சிகரட்டை பற்றவைத்துக் கொண்டு பேசினர்.

"ஒருநாள் காலை சுத்தமாக சலவை செய்யப்பட்ட புதிய சட்டையொன்றை சிவப்புத் தாளிலேமடித்து விழாக்களிலே பரிசு தருவது போல இரு கைகளையும் மேலே தூக்கி என்னிடம் தந்தாள். இரு கையேந்தி வாங்கி ஒருகையால் சுற்றியிருந்த காகிதத்தை நீக்கிக்கொண்டு பார்த்தேன். அழகாக வெட்டி, நன்ருக தைத்து எழிலோடு உருவாக்கப் பட்டிருந்த அச்சட்டை என் உள்ளத்தைக் கவர்ந்தது. அதை அவளே சலவை செய்ததாகவும், அணிவதற்கு முன் அதை மீண்டும் சலவை செய்தே அணிய வேண்டும் என்றும் மன்றுடினள். அதற்கு நான், 'நான் உன்னைக்கண்டு அஞ்சவில்லை. நம் இருவரின் உடலிலே உள்ள சதையும் ஒன்றுதான்' என்றேன்."

"அப்படியா சொன்னீர்கள்?" ஆத்திரத்தோடு கேட்டேன். டாக்டருடைய முகம் சிவந்தது. தொடர்ந்தார்:

"ஆமாம், அப்படித்தான் சொன்னேன். ஏன் சொன்னேன், எப்படிச் சொன்னேன், எதை நினைத்துக்கொண்டு சொன்னேன்என்பது எனக்கே தெரியவில்லை. என் உள்ளத்திலேயிருந்து அவ்வார்த்தைகள் எப்படியோ உருண்டோடி வந்தன. நீங்கள் எதை எண்ணுகின்றீர்களோ அதை நினைத்துக்கொண்டு நான் அந்த வார்த்தைகளைப் பேசவில்லை என்று நினைக்கிறேன். என்னைப்போன்ற ஒரு ஆணுக்கும், ஒக்கினவாவில் வாழும் ஒரு பெண்ணுக்கும் சில காரியங்கள் முடியாதவையாகவே இருக்கின்றன."

"அவள் என்ன நினைத்துக் கொண்டாள்." ஆர்வத்தோடு கேட்டேன்.

"தெரியாது, ஒரு ஆழ்ந்த பார்வையை என்னைப்பார்த்து வீசிவிட்டு வழக்கம்போல சிட்டாகப் பறந்து மறைந்து விட்டாள்."

"ஆகவே...?" கதை என்னைக் கவர்ந்தது.

"சில நாட்களுக்கெல்லாம் குட்ட நோய்க்கு உற்ற மருந்து கண்டுபிடிக்கப்பட்டது என்ற செய்தியைத் தாங்கி தந்தி ஒன்று வந்தது. இப்பொழுது அது பழைய செய்தி. முற்றிலும் குணப்படுத்தும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்பதையும், அத்துறையில் மருத்துவம் இன்னும் வளர வேண்டும் என்பதையும் உலகம் இன்று உணர்கிறது. நோயால் இழந்துவிட்ட சதையை மீண்டும் பெற முடியாது, அதனால் ஏற்பட்ட வடுக்கள் வடுக்களாகத்தான் இருக்கும், மங்காது, மறையாது. ஆனால் நிரந்தரமாக அந்நோயை நிறுத்தி வைக்க முடிகிறது. தயாரான மருந்தை தடையின்றி அனுப்புமாறு தந்தி ஒன்று கொடுத்தேன். மருந்து வந்தது. அந்த புதிய மருந்தின் முதல் பங்கு மேரிகோவுக்குத் தரப்பட்டது."

"மேரிகோ நலமடைந்து விட்டாளா?" நான் கேட்டேன்.

"நலமடைந்து கொண்டிருக்கிருள்."

"இப்பொழுது அவள் எங்கே இருக்கிருள்?" விடவில்லை நான். பெருமூச்சோடு பேசினர்.

"அவள் நோய் நீங்கி பெற்ற நலம் புதியதொரு பிரச்சினை

சேலம் தேர்தல் வழக்கு நிதி!

சேலம் தொகுதி தேர்தல் வழக்கை உயர்நீதிமன்றங்கள் வரை சென்று, சிறந்த வழக்கறிஞர்களைக் கொண்டு, சீரிய முறையில் நடத்தவேண்டி, கீழ்க்கண்டவர்கள் பெருந்தகைமையோடு நிதி தந்து உதவியுள்ளனர். அவர்களுக்கெல்லாம் என் மகிழ்ச்சியும் நன்றியும் வணக்கமும் உரியவாக! —இரா. நெடுஞ்செழியன்.

கீழ்த்துணையாங்குப்பம் தி. மு. கழகம் ரூ. 10–00.

வேப்பிலைப்பட்டி தி. மு. கழகம் ரூ. 0-99.

14-7-57 மதுரை சிறப்புக் கூட்டத்தில் மதுரை நகர திராவிட முன்னேற்றக்கழகம் ரூ. 300-00; தனிப்பட்டவர்கள் ரூ. 4-50.

15-7-57 இராசசிங்கமங்கலம் பொதுக்கூட்டத்தில்: தி. மு. கழகம் ரூ. 5-00; தனிப்பட்டவர்கள் ரூ. 0-75.

15-7-57 இராமனுதபுரம் பொதுக்கூட்டத்தில்: காட்டுரணி கிளைக்கழகம் ரூ. 12-00; தனிப்பட்டவர்கள் ரூ. 11-45.

16-7-57 பரமக்குடி பொதுக்கூட்டத்தில்: மேலாங்குடி உழவர்கள் ரூ. 10-00; தனிப்பட்டவர்கள் ரூ. 2-75.

18-7-57 செயங்கொண்டம் பொதுக்கூட்டத்தில் ரூ. 6-00.

சென்னை கார்பன் கம்பெனி தோழர்கள் இ. தணிகாசலம் அவர்கள் மூலம் ரூ. 13-75.

சிக்கத்தம்பூர் தி. மு. கழகம் ரூ. 1-00.

மணியார்டர் மூலமாகவும் அஞ்சல் மூலமாகவும் வரப்பெற்றவை:—

து. க. சாத்தலிங்கம், சென்னை-1 ரூ. 5-00; சி. கோபால், ஜோலார்பேட்டை ரூ. 2-00; வருசூர் தி. மு. கழகம் ரூ. 10-00; ஏ. வி. முத்துக்கிருட்டினன், வைத்தீஸ்வரன் கோயில் ரூ. 5-00; பி. வேலாயுதம், கோலாலம்பூர் ரூ. 18-00; கேரளப் பிரகாசம், மூணர் ரூ. 0-50.

திருமணத்தின் நினைவாக வரப்பெற்றவை:—செங்காட்டுப்பட்டி அரங்கசாமி-லீலா ரூ. 5-00; ஆத்தூர் பெரியசாமி-சுந்தரத்தம்மாள் ரூ. 2-00,

குழந்தைக்குப் பெயரிடுதல் நினைவாக வரப்பெற்றவை:—குடியேற்றம் குழந்தை பூங்கொடி ரூ. 3-00; உறையூர் சாமிநாதன் குழந்தை இளங்கோவன் ரூ. 2-00; திருச்சி எஸ். எம். சேட் குழந்தை நூர்ஜகான் ரூ. 1-00; காளாப்பூர் ஆண்டியப்பன் குழந்தை செங்குட்டுவன் ரூ. 2-00; செயங்கொண்டம் குழந்தை பாண்டியன் ரூ. 1-00.

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

இரா. நெடுஞ்செழியன்,

26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை—1.

யின் தோற்றுவாயாய் அமையும் என்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்களா? இல்லை; ஆனால் புதிய பிரச்சினை ஒன்று உருவானது. மேரிகோவும், நோயின் கொடுமைக்கு புதிதாக ஆளான வேறு மூன்று பெண்களும் முதன் முதலாக நலம் பெற்றார்கள். எனவே உள்ளே இடமில்லாமல் வெளியே காத்துக் கொண்டிருக்கும் நோயாளிகட்கு இடம் தரவேண்டி அவர்கள் மருத்துவ மனையை விட்டு வெளியேற வேண்டும். நோய் தீர்க்கும் அரு மருந்து என்னிடம் இருக்கிறது என்ற செய்தி மக்கள் மத்தியில் பரவப் பரவ பதுங்கிக் கொண்டும் ஒளிந்து கொண்டும் வாழ்ந்த நோயாளிகளெல்லாம் உள்ளே வரத் துவங்கினர் இரவு பகலாக எனக்கும் வேலை வளர்ந்தது. ஆனால் மேரிகோ என் நெஞ்சில் நிறைந்து விட்டாள், நினைவில் நீங்காத இடம் பெற்றாள். எங்கே போவாள்? எப்படி வாழுவாள்? யார் அவளுக்குப் பாதுகாப்புத் தருவார்கள்? என்ற கேள்விகள் என் நினைவைச் சுற்றி வளைத்து மூளையைத் தாக்கி விடை பெற முயன்றன. அவளோ எழில் தரும் இளம் பருவத்தினள் அவள் இதயத்திலேயே வாழ வேண்டும் என்ற விருப்பம், ஆம், வாழத்துடிக்கும் அந்த பளிங்குச் சிலைக்குச் சிறந்த பாதுகாப்புத் தரவேண்டும்."

"நீங்களே வைத்து அவளை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் உங்கள் இதயத்திலே வளரவில்லையா" என்று குறுக்கிட்டேன் நான்.

"இல்லை" என்று உறுதி கலந்த குரலில் சொன்னபடியே சிகரட் துண்டின் சாம்பலை தட்டுவதற்கு கிண்ணத்தைத் தேடினார். "குணமானவள் தான், எனினும் குட்ட நோயால் தாக்கப்பட்ட ஒரு கீழ் நாட்டு மங்கையை என்னால் மணந்துகொண்டு வாழமுடியாது. அந்த வாழ்வு வாழ்வாக

சாமான்கள் ஏற்றிச் செல்லும் லாரிகளில் மிக வேகமாகச் சென்றவை, செர்மன் நாட்டு மர்சிடஸ்-பென்சு கம்பெனியார் தயாரித்த லாரிகள்.

ஒரு கார் பளுவை ஏற்றிக் கொண்டு, அவர்கள் தயாரித்த லாரிகள் மணி ஒன்றுக்கு 106 மைல் வேகத்தில் சென்றன.

அமையாது. அவளுக்கும் அப்படித்தான். ஒக்கினவாவை விட்டு விலகி வேறு உலகிலே அவள் வாழ முடியாது; அவள் வாழ்வு துயரமாகத் தான் மாறும் அவர்கள் அறிந்துகொண்டுள்ளதையே பற்றிக் கொண்டு வாழும் வாழ்க்கையை மேற்கொண்டுள்ள பெண்களுள் அவளும் ஒருத்தி......"

"இப்பொழுது அவள் எங்கேயிருக்கிறாள்" ஆவலோடு கேட்டேன்.

"ஒரு குடும்பத்தோடு. கொஞ்ச காலமாகவே சிறு குக்கிராமம் ஒன்றில் வாழ்ந்து வருகிறாள் அவள். இதோடு அவள் வாழ்க்கைப் பிரச்சினை முடியவில்லை. ஆண்கள் பங்கேற்கும் அக்குடும்பத்திலிருந்து அவள் வெளியேறியாக வேண்டும். கடந்த வாரம் அவளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அவளுக்காக என் உதவியாளர் எழுதியிருந்தார். சிறிய வீடு ஒன்று தேவை யென்றும், அந்த வீட்டில் அவளோடு அம்மூன்று பெண்களும் சேர்ந்து வாழ்வதாகவும் ஒருவர்க்கொருவர் துணையாக வாழலாம் என்றும் அதில் எழுதியிருந்தது. வீட்டிற்குப் பணம் வேண்டும், அது தான் இப்போது விடை காண முடியாதபிரச்சினை. வீடுகிடைத்தாலும் வாழ்க்கையை ஓட்டிச் செல்ல வசதி வேண்டும். இப்பொழுது இருக்கும் தையல் இயந்திரத்தை தனியுடைமையாக்க முடியாததால், மேரிகோவுக்கு ஒரு புதிய இயந்திரம் வாங்கிக் கொடுத்தால் வாழ்விற்குப் போதிய வசதியை அதன் மூலம் பெற்றுக் கொள்வதாகக் கூறுகிறாள். இவையெல்லாம் அவர்கள் விடுதியை விட்டு வெளியேறுவதற்கு முன் கிடைக்க வேண்டும். இதற்கிடையே அவர்களுக்கு எப்படி ஆதரவு தருவது என்ற கேள்வி எழுந்துள்ளது."

"இதற்கு எவ்வளவு பணம் தேவை?" நான் கேட்டேன். "ஏறத்தாழ 1500 டாலர் தேவைப்படலாம். அதற்காக நான் உங்களுக்கு தொல்லை தரப் போவதில்லை, ஐரோப்பாவில் மிகப்பெரிய மருந்து தயாரிப்புக் கிடங்கில் எனக்கு நல்லதொரு வேலை கிடைத்திருக்கிறது. நான் அதை ஏற்கப் போகிறேன்."

ஆச்சரியம் அலைமோதக் கேட்டேன்; "ஏன், ஒக்கினவாவை நீங்கள் விட்டு விட்டீர்களா?" தலையை அசைத்தார். 'ஆகவே மேரிகோவை மீண்டும் நீங்கள் பார்க்க மாட்டீர்கள்?" ஆழ்ந்த சிந்தனையில் என் உள்ளத்தில் உதயமான கேள்வி இது. அமைதியாகப் பேசினார். "இல்லை, அதனால் தான் அவள் வாழ்வு நலம் பெறும் என்ற உறுதியான நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஆனால் பணம் மட்டும் அவள் வாழ்வில் நலம் சேர்க்க முடியாது. ஆகவேதான் நான் உங்களை நாடி வந்தேன்......"

"ஆகையால்...?" கொஞ்சம் கடுகடுப்பாகத்தான் கேட்டேன். அவருடைய நீலநிற விழிகள் என் உடலை ஒரு வ[...] யம் வந்தன. "உள்ளத்தை[...] உருக்குகின்ற இந்த ஒக்கினவ[...]

கண்ணீர் வெள்ளத்தில்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

"அவர் போரிடப் போர்க்களத்துக்குப் பிரிந்து போய் விட்டார்! பிரிந்து போகப் போவதாக அவர் என்னிடம் ஒருபொழுதும் சொல்லவில்லை, நானாகத் தான் ஊகித்தறிகிறேன்!" என்கிறாள் தலைவி.

"அவர் போர்க்களத்துக்குத் தான் போயிருப்பார் என்று நீ எப்படி ஊகிக்கிறாய்?" என்று கேட்கிறாள் தோழி.

"சென்ற சில நாட்களாக அவர் நாள்தோறும் வேலை எடுத்துத் துடைப்பதும், கேடயத்தை எடுத்து மயிற் பீலியும் மணியும் சூட்டுவதும் ஆன வேலைகளில் ஈடுபட்டிருந்தார். என்னையும், வழக்கம்போலில்லாமல், அளவுக்கு மீறிப் புகழ்ந்து பாராட்டிக் கொண்டிருந்தார். நான்கூட முதலில் ஐயப்பட்டேன். ஆனால் பிறகு அவரது பொய் மொழிகளில் மயங்கி ஏமாந்து போனேன்!" என்று தலைவி மொழிகிறாள்.

"அவர் கடமையை ஆற்றத் தானே போயிருக்கிறார்! அதற்காக நீ இப்படியெல்லாம் அழலாமா?" என்று தோழி கேட்கிறாள்.

"அவர் செல்லும் பாலை நிலத்தை நினைத்துக்கொண்டால் எனக்கு ஒரே அழுகையும் வருத்தமுமாக வருகின்றது. பரந்து படரும் காட்டுத் தீ எல்லா மரங்களையும் பொசுக்கி அழிக்க, அங்கே ஒதுங்கி நிற்பதற்கு ஒரு மர நிழல்கூட கிடைக்காதே' காண்போர்க்கு மகிழ்ச்சி தரக்கூடிய காட்சி அங்கு ஒன்றுகூட இருக்காதே!" என்று சொல்லி தலைவி வருந்துகிறாள்.

"உன் காதலர் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளக்கூடிய ஆற்றல் படைத்தவராதலால், நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்! அவர் வெற்றிவாகையோடு திரும்பி வருவார்!" என்கிறாள் தோழி.

"நான் கண்ணீர் வெள்ளத்தில் நீந்தி யுழலத்தான் இந்த நாளும் வந்தது போலும்; அவரும் என்னை விட்டுப் பிரிந்தார் போலும்! நான் இனி எப்படி உயிர்வைத்திருக்கப் போகிறேனோ தெரியவில்லை!" என்று பலவாறாகச் சொல்லி புலம்பியழுது மூர்ச்சையாகி விடுகிறாள்.

தோழி அவளை அணைத்தெடுத்து ஆறுதல் கூறித் தேற்றுகிறாள்.

இது நற்றிணை-177ஆம் செய்யுளில் வந்துள்ள கருத்தை உள்ளடக்கித் தீட்டப்பட்ட சொல்லோவியக் காதற் காட்சியாகும். இந்தச் செய்யுள் நெய்தல் திணைச் சார்ந்த "தலைவன் பிரிந்து செல்வதைக் குறிப்பால் அறிந்துகொண்ட தலைமகள்தோழிக்குச்சொல்லியது" என்னும் பிரிவைச் சேர்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றிய புலவர் யார் என்று தெரியவில்லை.

பரந்துபடு கூரெரி
கானம் நைப்ப
பரந்தீ உற்ற
மகிழ்தலை அம்காட்டு
ஒதுக்கரும் வெஞ்சுரம்
இறந்தனர் மற்றவர்
குறிப்பிற் கண்டிசின்
யானே நெறிப்பட
வேலும் இலங்கிலை
துடைப்ப பலகையும்
பீலி சூட்டி மணியணி பவ்வே
பண்டினும் நனிபல
அளிப்ப இனியே
வந்தன்று போலுந்
தோழி நொந்துநொந்து
எழுதெழில் உண்கண்
பாவை
அழிதரு வெள்ளம்
நீந்தும் நாளே

[நற்றிணை-177]

[பொழிப்புரை: தோழி! நம் காதலர் பரந்துபட்ட மிக்க தீ காடுமுழுவதும் எரிந்து அழித்தலினால் அதனிடை யிருந்த மரங்களெல்லாம் தீந்து கண்டோர்க்கு மகிழ்ச்சி நீங்கலாகிய காட்டகத்து ஒதுங்கியிருத்தற்கும் நிழலில்லாத கொடிய சுரத்தின் கண்ணே சென்றுவிட்டனரென்பது திண்ணம், அவர் செய்யுஞ் செய்கையின் குறிப்பினால் யான்கண்டறிந்தேன் மன்; யாங்ஙனம் அறிந்தனை கொலென நீ வினவுதியேல் இயம்புவன் கேள், ஒழுங்குபட வேலின் இலங்கிய இலையையும் மாசு போகத் துடைப்பர்; அதுவல்லாமல் கேடயத்தையும் மயிற்பீலி சூட்டி மணியை அணிவர்; மற்றும் முன் போலின்றி என்னையும் மிகப் பலபடியாகப் பாராட்டி அன்பு செய்வர்; ஆதலின் யான் வருந்திவருந்தி ஓவியர் எழுதுதற்குத் தகுந்த அழகமைந்த மைதடவப்பட்ட கண்ணிலே பாவை தோன்றுதபடி வெள்ளம் போன்று கண்ணீர்வடிய அவ்வெள்ளத்தின்கண் விழுந்து நீந்தியுழலும் நாள் இன்னேவந்து இறுத்தது போலும்; இனி எவ்வாறு ஆற்றுகிற்பேன்?

கூர்-மிக்க: நைப்ப- எரிந்து அழிய; பலகை-கேடயம்.]

* * *

தலைவன் தன்கடமையையாற்றத் தலைவியை விட்டுப் பிரிய எண்ணுதலும், அதைக் குறிப்பாலுணர்த்த அவன் முயலுதலும், அந்தக் குறிப்பை அறிந்துகொண்ட தலைவி ஆற்றாளாத் துயரடைதலும் ஆன தன்மைகள் இச் செய்யுளில் அழகுபட எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

தலைவன் தலைவியைப் பிரியும்போது முன்னைக் காட்டிலும் மிகுதியாகப் பாராட்டினான் என்று புலவர் கூறுதல் நயப்பாடு நிறைந்ததாகும்.

கேடயத்திற்கு, மயிற்பீலியையும், மணிகளையும் அழகுக்காகச் சூட்டுதல் உண்டு என்பது தெரியவருகிறது.

கண்ணின் அழகைக் குறிப்பிடும்போது, ஓவியர் எழுதுதற்குத் தகுந்த அழகுடைய மைதடவப்பட்ட கண் என்று குறிப்பிடுவது பாராட்டுதற்குரிய நயப்பாடாகும்.

ஐந்தாண்டுத் திட்ட அலங்கோலம்

——(0)——

நீர்ப்பாசனத் திட்டங்களில் பலன் மிகக் குறைவு.

——(0)——

85 லட்சம் ஏகராக்கள் எதிர்பார்த்தார்கள், 40 லட்சம் ஏகராக்கள் வந்துள்ளன.

——(0)——

செலவு மட்டும் 569 கோடி ரூபாய்.

——(0)——

பிரெஞ்சு நாட்டில் ஒரு கதாசிரியர் இருந்தார். அவர் ஒரு பெரிய வீடு கட்ட ஆரம்பித்தார். மற்றவர்கள் வீடு கட்ட ஆரம்பித்தால், என்ஜினியரைக் கூப்பிட்டு பிளான் போட்டு வீடு கட்டுவார்கள். இந்தஆசிரியர் என்ஜினியரைக் கூப்பிடாமல், தானுகவே ஒரு பிளான் போட்டு வீட்டைக் கட்ட ஆரம்பித்தார். முன் பக்கம் பெரியதூண்கள், முதலில் வரவேற்பு அறை, சாப்பிடும் அறை, குளிக்குமிடம், மாடியில் படுக்கையறை, அதையடுத்து பால்கனி இப்படி வீடு படிப் படியாக வளர்ந்தது. தான் சொன்னபடி அப்படியே கட்டி முடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தார். கதாசிரியர் கருத்துப்படி மாடி வீடு கட்டி முடிக்கப்பட்டது.

கட்டி முடிக்கப்பட்ட வீட்டைப் பார்வையிட கதாசிரியரின் நண்பர்கள் வந்தார்கள். வெளித்தோற்றம் கம்பீரமாக இருந்தது. பளபளப்பான தூண்கள், அழகான வாயற்படி, பெரிய முன்னறைகள், எல்லாம் நன்றாக இருந்தன. கீழே சுற்றிப்பார்த்து விட்டு மாடியில் போய் பார்க்க நண்பர்கள் விரும்பினார்கள், ஆனால் அவர்களால் மாடிக்குப் போக முடியவில்லை.

காரணம மாடிக்குப் போகப் படிக்கட்டுகள் வைக்கப்படவில்லை!

கீழே தளம் போடப்பட்டு அறைகளும் கூடங்களும் தடுக்கப்பட்டிருந்தன, அதேபோல் மேலே தளம் போடப்பட்டு அறைகளும் மாடங்களும அமைக்கப் பட்டிருந்தன, ஆனால் கீழிருந்து மேல் செல்ல படிக்கட்டுகள் இல்லை.

கீழிருந்து மேல் தளத்துடன் தொடர்பு கொள்ள படிக்கட்டுகளை வைக்க கதாசிரியர் மறந்து விட்டார். அவர் போட்டுத் தந்த பிளானில் அது விடப்பட்டுவிட்டது. வீடுகட்டி முடிந்ததும் பார்த்தால் மாடி இருப்பது தெரிகிறது, ஆனால் மாடிக்குப்போக வழி இல்லை.

இது கதையல்ல, உண்மையிலேயே நடந்தது.

மாடியமைத்து, மாடியில் அறைகளையும் மாடங்களையும் அமைத்து, ஆனால் மாடிக்குப் போகும் வழியமைக்க மறந்து போன கதாசிரியரைப் போல, இந்திய அரசாங்கத்தினரும் திட்டங்களை நிறைவேற்று கிருர்கள்.

மாடி வீடு கட்டப்பட்டது, மாடியும் இருக்கிறது, ஆனால் அங்குபோக வழியில் ...

அதைப்போல முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிக்கப்பட்டது. அதில் சில திட்டங்கள் உருவாகிவிட்டன. ஆனால் போட்ட திட்டங்களின் பலன் மக்களுக்குக் கிடைக்கும் வகையில் இல்லை.

நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் இருக்கின்றன, மற்றொரு புறத்தில் அதை அடைய வேண்டிய மக்கள் இருக்கின்றனர். இரண்டுக்கும் தொடர்பு உண்டாக்கப்படவில்லை.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வடநாட்டில் பெரும் அணைக்கட்டுகள் நீர்த்தேக்கங்கள் எல்லாம் போடப்பட்டன. திட்டத்தைப் போடும்பொழுது ஒவ்வொரு அணைக்கட்டைப் பற்றியும் பிரமாதமாக அரசாங்கத்தினர்புகழ்ந்தனர். "நானூறு அடி உயரம், நாற்பது சதுர மைல் பரப்பு, அதன் தண்ணீரைக் கொண்டு நான்கு லட்சம் ஏக்கராக்களைப் பயிரிடலாம்" என்றெல்லாம் கணக்குப் போட்டுச் சொன்னார்கள். அவர்கள் போட்ட திட்டங்களில் ஒன்றிரண்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. எதிர்பார்த்த அளவு பலன்கள் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள பலன்களும் சரியானபடி உபயோகத்துக்கு வரவில்லை.

ஒரு அணைக்கட்டுக் கட்டப்பட்டால், அதனால் தண்ணீர் தேக்கப்படுகிறது. தேக்கப்பட்ட தண்ணீரைப் பிரித்துக் கொடுக்க சரியான கால்வாய்களைத் திட்டத்தின் கீழ் செய்து முடிக்கவில்லை. மாடி கட்டி அதற்கு படிக்கட்டுகள் வைக்காதது போல் 100 கோடி 150 கோடி என்று போட்டு பெரிய அணைக்கட்டுக்களைக் கட்டிவிட்டார்கள். ஆற்று நீர் தேக்கப்பட்டு விட்டது. தேக்கப்பட்ட நீர் அப்படியே இருக்கிறது. அதைப் பல பிரிவுகளில் பிரித்துக்கொடுத்தால்தான், நிலங்களுக்குப் பாய்ந்து, விளைவு அதிகரிக்கும். கால்வாய்கள்

கதையை நீங்கள் மக்களுக்குச் சொல்லவேண்டும். இதுதான் என் ஆசை. அப்படி உணர்ந்தால் மட்டுந்தான் அமெரிக்கர்களுக்கு புகழும் பெருமையும் தரத்தக்க வகையிலே ஒக்கினவா நிலையை உணர்த்த வேண்டும் என்ற எண்ணம் உருவாகும், ஆபத்தான பூமி, இழிவான இடம் என்ற மாசுகள் துடைக்கப்பட்டு பாதுகாப்பான தீவு, ஆசிய நாடுகள் அனைத்தும் பார்த்துப் பரவசப் படத்தக்க, பசிபிக் கடலில் அமைந்துள்ள காட்சி சாலை என்ற உயர்நிலை பெறும்."

"ஒக்கினவாவைப் பற்றித் தானே கதையெழுதச்சொல்லுகிறீர்கள்? காதலைப்பற்றியல்லவே? இன்னொரு வண்ணத்திப்பூச்சி கதையல்லவே?" என்று புன்னகையோடு கேட்டேன். அவருடைய பார்வை என் பார்வையைவிட்டு விலகிச்சென்றது. நான் ஒக்கினவாவைபபற்றி போதுமான அளவு அறியாத காரணத்தால் என்னுல் எழுத முடியாது என்று மெதுவாக மறுத்தேன். "அப்படியானுல் என் முயற்சி தோற்றது" என்ருர்.

"உங்களுக்கு முயற்சி இருக்கிறது என்று நான் நம்புகிறேன்." என்று சொல்லிக்கொண்டே கைக்கடிகாரத்தின் மேல் கண்ணேட்டத்தை விட்டேன். அவரைத் தவிர்க்க முடியவில்லை. வடித்துவைத்த சிலைபோல வைத்தகண் வாங்காமல் வாட்டம் முகத்தில் தோன்ற என்னை ஏற இறங்க பார்த்துக் கொண்டிருந்தார். எனக்கு அவர்மேல் அனுதாபம் ஏற்பட்டது. அவர் நல்லவர் என்பதை என்னுல் உணரமுடிகிறது. இந்த தீய உலகத்தில் மிகவும் நல்லவனுக வாழ்வது எப்பொழுதுமே அனுதாபத்திற்குரிய தாகத் தானிருக்கிறது!

"மேரிகோவின் கதையை மனத்தைப் பற்றியிழுக்கும் வகையில் சொன்னீர்கள். நீங்கள் அதில் தவறவில்லை. நானும் அவளை நன்ருக உணர்ந்துகொண்டேன்:" இரக்கம் தொனிக்கப்பேசினேன். அவர் கண்கள் திரும்பவும் ஒளி பெற்றன.

"உணர்ந்தீர்களா...?" ஆர்வத்தோடு கேட்டார். என் இதழின் அசைவில் விடையை எதிர்பார்த்த அவர் பார்வையும் அவர் இதயத்தை ஊடுருவிச் சென்ற என் நோக்கும் ஒரு கணம் மோதி பின் நிலைத்தன.

"இப்பொழுது அவள் நிலை என்ன?" என்றேன். டாக்டரின் கன்னங்கள் சிவந்தன. "நான் அவளை நினைத்துக் கொண்டிருக்கும் வகையில், நான் அவளைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கும் முறையில் ஒக்கினவாவில் அவள் வாழ்ந்துவந்த வாழ்க்கையை நீங்கள் கதையாக்க முடியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை," என்ருர்.

"எனவே என்னை ஒரு காதல் கதை எழுதுமாறு கேட்கின்றீர்களா?" என்றேன்.

"இல்லை, ஆனால் என்னுல் எழுதமுடியாத கடிதம் ஒக்கினவா மக்கட்கு ஒரு காதற் கடிதம், ஒரு அன்பு மடல் எழுதுங்கள். ஒருவேளை அவளும் அக்கடிதத்தைப் படிக்கலாம், அல்லது பக்கம் நின்று கேட்கலாம்." என்று உறுதி கலந்த குரலில் பேசினுர்.

திடீரென்று எழுந்து என்னுடன் கைகுலுக்கினுர். அவர் முகத்திலே ஒரு நடுக்கம் இருந்தது. அதை உணர்ந்து கொண்ட அவர் தன் தொப்பியைத் தேடுவது போல முகத்தைத் திருப்பிக் கொண்டார். அவர் தொப்பி கீழே இருந்ததைப் பார்த்தேன். அவருடைய கோட்டின் நாடாவை இழுத்தவாறு வேகமாக காலை எட்டிப்போட்டு வாசலை நோக்கி நடந்தார். வணக்கம் என்று நான் விடை கொடுத்தேன் அவர் பதில் எதுவும் தரவில்லை.

நான் எங்கே இருக்கிறேன் என்பதையேமறந்துவிட்டேன், கதை அந்த அளவுக்கு என்னைக் கவர்ந்திருந்தது. நாற்காலியில் உட்கார்ந்தபடி அவருக்காக அந்த அன்பு மடலைத் தீட்டினேன். மேரிகோவுக்கோ அல்லது ஒக்கினவாவுக்கோ அவர் பெயரால் நான் தீட்டிய அன்புத் திருமுகம், இதோ இதுதான்! ○

மோட்டார் சைகிளில் மிக அதிக வேகத்துடன் செர்மன் நாட்டைச் சேர்ந்த வில்கைம் கெர் என்பவர் 1956 ஆகஸ்ட் 4-ந் தேதி சென்றார். அவர் சென்றது மணி ஒன்றுக்கு 211 மைல் வேகம்!

இன்னம் உண்டாக்கப்படாத காரணத்தால், போடப்பட்ட அணைக்கட்டுகள் வீணுகநீரைத் தேக்கி பின் பழைய ஆற்று வழியாகத் திறந்து விடப்பட்டு வீணுக முன்போல கடலுக்குப் போய் விழுகிறது!

இரண்டாவதாக, புதிய பாசனத்துக்குச் சில இடங்களில் தண்ணீரைக் கொண்டுவந்து கொடுத்தாலும், புதிய தண்ணீரை உபயோகிக்க நிலக்காரர்கள் மறுக்கிருர்கள். காரணம் புதியபாசனத்துக்கு அரசாங்கம் அதிகத் தீர்வை கேட்கிறதாம். “உங்கள் தண்ணீரும் வேண்டாம் அதிகத் தீர்வையும் வேண்டாம். நாங்கள் முன்போலவே கிணற்றிலிருந்தோ குளத்திலிருந்தோ தண்ணீர் எடுத்துச் சாகுபடி செய்து கொள்ளுகிறோம்” என்று உழவர்கள் சொல்கிருர்களாம். நிலத்தீர்வை அந்த அளவுக்கு அதிகரித்து விட்டது. வரண்ட பிரதேசங்களுக்குத் தண்ணீர் கொண்டுவந்தால் போதுமென்று இருந்தது. இவர்கள் போடுகிற தீர்வையைப் பார்த்தால், தண்ணீரே வேண்டாமென்று உழவர்கள் சொல்கிருர்கள்.

ஒரிசா மாநிலத்தில் இராகுட் அணைக்கட்டு இப்பொழுது முடிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு லட்சம் ஏகர்களுக்குத் தண்ணீர் தரக்கூடிய நிலையில் இருக்கிறதாம். இது குறித்து அரசாங்கம் பெருமைபட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் தண்ணீரை உபயோகிக்க உழவர்கள் முன்வர மறுக்கிருர்களாம். ஒரு உழவன் “என் நிலத்துப்பக்கம் உங்கள் தண்ணீர்வந்தால், கோர்ட்டில் வழக்குத் தொடுப்பேன்!” என்று எச்சரிக்கை அனுப்பிஞனும். இந்த விவரத்தை மத்திய நீர்ப்பாசன மந்திரி எஸ். கே. படில் பம்பாயில் வெளியிட்டார்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய அரசாங்கம் வடநாட்டில் பெரிய பெரிய அணைக்கட்டுகளைக் கட்டியது. அதையொட்டி, தேங்கிய தண்ணீரைப் பிரித்துக் கொடுக்க கால்வாய்கள் வெட்டப்படவில்லை, கால்வாய்கள் அமைத்துத் தண்ணீர் வந்தாலும் உயர்ந்த தீர்வைகளின் காரணமாக உழவர்கள் அந்த வசதியை உபயோகிக்க மறுக்கின்றனர். இதுதான் இன்றைய நிலை.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நீர்பாசனத் திட்டங்களுக்காக மொத்தம் 569 கோடி ரூபாய்கள் செலவிடப்பட்டன.

திட்டத்தின்படி பெரிய அணைக்கட்டுகளின் மூலம் 85 லட்சம் ஏகரா நிலங்களை பயிர்த்தொழிலுக்குக் கொண்டுவரலாம் என எதிர்பார்த்தார்கள்.

திட்டத்தின் முடிவில், 85 லட்சம் ஏகரா அல்ல, 63 லட்சம் ஏகரா நிலங்களுக்குத்தான் தண்ணீரும் வசதிகளும் கிடைக்கும் என்று சொன்னுர்கள்.

கடைசியாக புது அணைக்கட்டுகளின்மூலம் எவ்வளவு ஏகரா நிலங்கள் உண்மையாகவே பயிர்த்தொழிலுக்கு உதவப்பட்டன என்று பார்த்தால், 40 லட்சம் என்று கூறப்படுகிறது.

இவர்கள் திட்டத்தின்படி எதிர்பார்த்தது 85 லட்ச ஏகராக்களுக்கு பாசனம்!

திட்டத்தில் கிடைத்தது 63 லட்சம் ஏகர்களுக்குப் பாசனம் செய்யக்கூடிய தண்ணீர்!

ஆனுல் பயன்படுத்தப்பட்டது 40 லட்சம் ஏகராக்களுக்குப் பாசனம்!

முதலில் இவர்கள் 569கோடி ரூபாய்களை போட்டபொழுது இவர்கள் எதிர்பார்த்தது 85 லட்சம் ஏகரா நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதி கிடைக்குமென்று. ஆனுல் திட்டங்கள் முடிந்து பார்த்தால் 63 லட்சம் ஏகரா பாசன வசதிகள்தான் கிடைத்தன. அதாவது எதிர்ப்பார்த்ததில் முக்கால் பங்குதான் கிடைத்தது.

கிடைத்த முக்கால் பங்கிலும் மற்றொரு கால்பங்கு பயன் பயன்படுத்தப்படவில்லை. உண்மையில் பயன்படுத்தப்பட்டது போட்டதில் அரைப்பங்கு! மொத்தம்செலவான 569கோடி ரூபாய்க்கு நாம் எதிர்பார்த்த பலனில், கடைசியாக 268கோடி ரூபாய் அளவுகளுக்குத்தான் பலன் கிடைத்திருக்கிறது, பாக்கி 301 கோடி ரூபாய்கள் அளவுக்கு நாம் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை!

பம்பாய் மாநிலத்தில் மொத்தம் 4 லட்சத்து 74 ஆயிரம் ஏகர்நிலங்களுக்கு நீர்ப்பாசனம் தர திட்டங்கள் போடப்பட்டு நிறைவேற்றப்பட்டன, உண்மையில் புதிதாக நீர்பாசனத்துக்கு கொண்டுவரப்பட்டவை 43 ஆயிரம் ஏகரா நிலங்கள் தாம்!

திட்டத்தின்படி உத்தரபிரதேசத்தில் 16லட்சத்து 74ஆயிரம் ஏகரா நிலங்களுக்கு புதிய நீர்ப்பாசனம் எதிர்பார்க்கப்பட்டது, கடைசியில் 7 லட்சத்து 40 ஆயிரம் ஏகராக்கள் தாம் புதிய பாசானத்துக்கு வந்தன.

பஞ்சாபில் 6,66,000 ஏகரா புதிய பாசனம் எதிர்பார்க்கப்பட்டதற்கு, 4,60,000 ஏகராக்கள் தாம் வந்துள்ளன.

சென்னை மாநிலத்தில் 4,35,000 ஏகராக்கள் எதிர்பார்க்கப்பட்டதற்கு, 2,21,000 ஏகராக்கள்தாம் புதிய பாசனத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

மேற்கு வங்காளத்தில் திட்டமிடப்பட்டது 3,50,000 ஏகராக்கள்; உண்மையில் நீர்பாசனத்துக்கு வந்துள்ளது 2,23,000 ஏகராக்கள்.

சௌராட்டிரத்தில் திட்டமிடப்பட்டது 1, 29, 700 ஏகராக்கள்; கடைசியாக நிறைவேறியது 46, 000 ஏகரா நிலங்கள்!

மத்தியப் பிரதேசத்தில் திட்டமிடப்பட்டது 1,14,000 ஏகராக்கள்; நிறைவேற்றப்பட்டது 10, 000 ஏகராக்கள்தாம்!

திட்டங்களுக்காகப் போடப்பட்ட பணம் பெரும்பாலும் செலவாகிவிட்டது, ஆனுல் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கவில்லை.

திட்டங்களைத் தீட்டியவர்கள் முதலாவதாகப் போடப் போகும் திட்டங்களுக்கு என்ன பலன்கள் கிடைக்கும் என்பதைத் திட்டமாகக் கண்டறிந்து, திட்டங்களுக்காகச் செலவிட ஆரம்பித்திருக்க வேண்டும். அதிகமாக எதிர்பார்த்து ஏராளமாகச் செலவு செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.

ஒரே இடத்தில் மிகப் பெரிய திட்டங்களைப்போட்டு, பின் சேகரிக்கப்பட்ட ஏராளமான வசதிகளைப் பிரிக்கும் வகை தெரியாது தவிப்பதை விட்டு, எல்லாபபகுதிகளுக்கும் பரவியிருக்கும் வகையில் திட்டங்களை முன்னதாகப் பிரித்துப் போடவேண்டும்.

திட்டங்களைப்போட்டு பலன்களை உண்டாக்குவதுடன், அந்தப் பலன்களைச் சாதாரண மக்களும் பெருமளவுக்குச் செய்திருக்க வேண்டும். இதற்கு, வாங்கும் சக்தி எல்லாப் பகுதிகளிலும் எல்லா மக்களுக்கும் ஒரே சீரான அளவில் பரவியிருக்க வகை செய்யவேண்டும். இல்லாவிட்டால், மாடியைக் கட்டி அங்கு போக வழியில்லாத வீட்டைப்போல, நாட்டின் பொருளாதாரம் ஆகிவிடும்! 0

தொழிற்சாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லில் வைப்பதாக இருந்த கௌகாத்தி அசாம் மாநிலத்தில் இருக்கிறது. பின்பு வைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பௌராணி என்ற இடம் பீகார் மாநிலத்தில் இருக்கிறது. “பீகார், அசாம் இரண்டும் இந்தியாஎன்கிற பாரத்வர்ஷத்தில்தான் இருக்கின்றன! பிகாரில் இருப்பவர்களும் அசாமில் இருப்பவர்களும் பாரதபுத்திரர்கள்தாம்! ஏக இந்தியா ஒற்றுமைப்பட்ட தேசம்!“என்றெல்லாம் தேசியத்தலைவர்கள் உபதேசித்திருக்கிருர்கள். அந்த உபதேசங்களையெல்லாம் அசாமியர்கள் மறந்துவிட்டனர். “ஏக இந்தியா” என்ற பூகோளப் பாடத்தைக் கேட்டுக் கேட்டு அசாம் நாட்டினர் அலுத்துவிட்டனர். அசாம் தவிர மற்ற மாநிலங்கள் அவர்களுக்கு வெளிநாடுகளாகத்தான் படுகின்றன.

“அசாம் நாடு, அசாம் எண்ணெய், அசாம் நாட்டில் தொழிற்சாலை” என்ற நாட்டுப் பற்றுடன் அவர்கள் கவனிக்கிருர்கள். அந்த நாட்டுப் பற்று உணர்ச்சியின் மீது “தொழிற்சாலை எங்கள் பிறப்புரிமை” என்ற முழக்கம் எழுகிறது. நாட்டுப்பற்று உணர்ச்சியின் மீது அன்று “சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை” என்ற முழக்கம் எழுந்தது. இன்றும் நாட்டுப்பற்றுஉணர்ச்சியின்மீது “தொழிற்சாலை எங்கள் பிறப்புரிமை” என்ற முழக்கம் எழுகிறது.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் அகப்பட்டிருந்த நேரத்தில் இந்தியா முழுவதிலும் “சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை” என்ற வாசகம் உணர்ச்சியை ஊட்டியது. ஆங்கில ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுபட, இந்தியா முழுவதும் ஒன்றுபட்டு போராடினுர்கள், ஆங்கில ஏகாதிபத்தியம் வெளியேறியதும். ஒவ்வொரு பகுதியும், தனது பகுதியை வளப் படுத்தும் நோக்கத்துடன் இருக்கிறது. அசாம் என்று கூறும்பொழுது அசாமியனுக்கும், மராட்டியம் என்று கூறும்பொழுது மராட்டியனுக்கும், வங்காளம் என்று கூறும் பொழுது வங்காளத்தவனுக்கும் உண்டாகிற உற்சாகமும் அக்கரையும் “ஏக இந்தியா” என்று கூறும்பொழுது ஏற்படக் காணேம். “ஏக இந்தியா” என்ற ஒற்றுமை உணர்ச்சி இருந்தால், எண்ணெய்த் தொழிற்சாலை பீகாரில் ஏற்படுவதைப்பற்றிக் கவலைப்படாமல் அசாம் மாநிலத்தில் இருப்பவனும் “இந்தியாவுக்குள் ஒரு புதிய தொழிற்சாலை” என்று மகிழ்ச்சியடைய வேண்டும். இப்பொழுது மகிழ்ச்சியல்ல, கடுங்கோபம் கொப்பளிக்கிறது, அசாம் எண்ணெய்த் தொழிற்சாலையை பிகாருக்கு மாற்றுவதென்றுல்!

நாடு நன்ருக வாழ விடுதலை தேவை என்று எண்ணியதால் “சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை” என்றமுழக்கம் எழுந்தது.

நாடு நன்ருகவாழத் தொழில் வளர்ச்சி தேவை என்று தெரிவதால் “தொழிற்சாலை எங்கள் பிறப்புரிமை” என்ற முழக்கம் வருகிறது.

லண்டனில் இருந்த ஏகாதிபத்திய வாதிகள் விடுதலை உரிமையை அன்று மறுத்தனர், டில்லியில் இருக்கும் ஏகாதிபத்திய வாதிகள் ஒருசில குறிப்பிட்ட பகுதிகளைத்தவிர மற்ற பகுதிகளின் தொழில் வளர்ச்சியை மறுத்து வருகின்றனர்.

தொழில் வளர்ச்சிக்கு — தொழிற்சாலைகளை ஏற்படுத்தும் உரிமைக்கு, அரசியல் உரிமை அவசியம் என்ற உண்மை தெரிந்தால் “தொழிற்சாலை எங்கள் பிறப்புரிமை” என்ற முழக்கம் “சுதந்தரம் எங்கள் பிறப்புரிமை” “தன்னுட்சி எங்கள் பிறப்புரிமை” என்ற முழக்கமாக மாற அதிககாலம் பிடிக்காது! 0

“மன்றம்” அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. ... வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. —(தொலைபேசி எண்: 55697